வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu




Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 13.11.2024 புதன்கிழமை இதழ் : 317 பக்கங்கள் : 12

# அமைதியான தேர்தலை நடத்த சகலரும் ஒத்துழைப்பு தாருங்கள்

## தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர்



கொழும்பு, நவம்பர் 13

**"அமைதியான தேர்தலை நடத்த அரசியல் கட்சிகளும் சுயேச்சை குழுக்களும் பொது மக்களும் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும். அத்துடன், நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் வாக்காளர்கள் தமது ஜனநாயக கடமையை தவறாது நிறைவேற்ற வேண்டும்" என்று தேர்தல்கள் ஆணைக்குழு கேட்டுள்ளது.**

பாராளுமன்றத் தேர்தல் தொடர்பில் விளக்கமளிக்கும் விசேட செய்தியாளர் சந்திப்பு நேற்று செவ்வாய்க்கிழமை அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இதில் கருத்து வெளியிட்ட போதே தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் ஆர். எம். ஏ. எல். ரத்நாயக்க இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், "இதுவரை வாக்காளர் அட்டை கிடைக்காதவர்கள் 11

# 12 வாக்களிப்பு நிலையங்கள் யாழ்ப்பாணத்தில் இடமாற்றம்!

யாழ்ப்பாணம், நவ. 13

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில்12 வாக்களிப்பு நிலையங்கள் புதிய இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளன என்று யாழ். மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் ம. பிரதீபன் அறிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் வாக்களிப்பு நிலையங்களாக இயங்கிய 12 நிலையங்களே இவ்வாறு மாற்றப்பட்டுள்ளன. இதன்படி, ஊர்காவற்றுறை தேர்தல் தொகுதியில் வேலணை மத்திய கல்லூரி விடுதி வாக்களிப்பு நிலையம் சரவணை பள்ளம்புலம் முருகமூர்த்தி ஆலய நால்வர் மணிமண்டபத்துக்கும் 11

# வாக்கு உங்கள் உரிமை கட்டாயம் பயன்படுத்துக!

## தேர்தல் ஆணைக்குழு தலைவர் கோரிக்கை

கொழும்பு, நவ. 13

"வாக்கு உங்கள் உரிமை, நவம்பர் 14 ஆம் திகதி அதனை கட்டாயம் பயன்படுத்துங்கள்." என்று தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன், தேர்தலை நீதியாக நடத்துவதற்குரிய அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன எனவும், பாதுகாப்பு ஏற்பாடுகள்கூட உரிய வகையில் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் அவர் கூறினார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இந்த விடயத்தை வலியுறுத்தினார். (அ)

# பிள்ளையான் சி.ஐ.டிக்கு கடிதம்!

கொழும்பு, நவ. 13

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் தான் சாட்சியமளிக்க வேறொரு தினத்தை ஒதுக்கித் தருமாறு கோரி குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு (சி. ஐ. டி.) முன்னாள் இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தன் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

உயிர்த்த 11

# பிரான்ஸ் அனுப்புவதாக மோசடி யாழில் வேட்பாளர் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், நவ. 13

பிரான்ஸில் வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி பணம் மோசடி செய்த சம்பவத்தில் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று செவ்வாய்க் கிழமை யாழ்ப்பாணத்தில் வைத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். சாவகச்சேரியை சேர்ந்த ஒருவர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையிலேயே குறித்த சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவரை பிரான்ஸில் தொழில் வாய்ப்புப் பெற்றுத் தருவதாகக் கூறி சந்தேகநபர் 5 இலட்சம் ரூபாயை பெற்று மோசடி செய்துள்ளார் என்று கூறப்படுகின்றது. அவரிடம் வெளி நாட்டு வேலை வாய்ப்பு நிறுவனம் எதுவும் இல்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைதானவர் யாழ்ப்பாணத்தை சேர்ந்த 49 வயது நபராவார். 11

# மின் கட்டண குறைப்பு முன்மொழிவு அடுத்த வாரம் சமர்ப்பிக்கப்படும்!

கொழும்பு, நவ. 13

மின்சார கட்டணத்தை குறைப்பதற்கான முன்மொழிவுகள் அடுத்த வாரத்துக்குள் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படும் என்று இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

மின்சார கட்டணத்தை குறைப்பதற்கான முன்மொழிவுகளை இலங்கை மின்சார சபை கடந்த அரசாங்கத்தின் காலத்தில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்திருந்தது.

எனினும், ஆட்சிமாற்றத்தின் பின்னர் அந்த 11

# 10ஆவது பாராளுமன்றம் நவ. 21இல் கூட அழைப்பு

## விசேட வர்த்தமானி வெளியானது

கொழும்பு, நவ. 13

பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வு எதிர்வரும் 21ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு நடைபெறும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க அதிவிசேட வர்த்தமானியை வெளியிட்டுள்ளார்.

இந்த அதிவிசேட வர்த்தமானி நேற்று செவ்வாய்க் கிழமை வெளியிடப்பட்டது.

10ஆவது பாராளுமன்றத்துக்கான தேர்தல் நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளது என்பது குறிப்பிடத் தக்கது. (ஐ)

# விடத்தல் தீவில் இறால் பண்ணை; வர்த்தமானிக்கு இடைக்கால தடை!

கொழும்பு, நவ. 13

மன்னார் - விடத்தல்தீவில் பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியில் ஒரு பகுதியை இறால் பண்ணை அமைப்பதற்காக விடுவிக்கும் வர்த்தமானி அறிவித்தலுக்கான இடைக்கால தடையை உயர்நீதிமன்றம் நீடித்துள்ளது.

கடந்த அரசாங்கத்தின் காலத்தில் விடத்தல்தீவு பாதுகாப்பு வனப் பகுதியிலிருந்து 168 ஏக்கர்களை விடுவிப்பதற்கு வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப் பட்டது. இந்த வர்த்தமானி அறிவித்தல் மீதான தடையே நீடிக்கப்பட்டுள்ளது. 11

# ஆனையிறவு சோதனை சாவடி அகற்றப்பட்டது!

கிளிநொச்சி, நவ. 13

கிளிநொச்சி - ஆனையிறவில் கடந்த 17 வருடங்களாக அமைக்கப்பட்டிருந்த சோதனை சாவடி நேற்றைய தினம் அகற்றப்பட்டது.

யாழ்ப்பாணத்துக்கான ஒரேயொரு தரைவழி தொடர்பான ஆனையிறவு வரலாற்றுக் காலம் தொட்டு முக்கியத்துவம் பெற்ற இடமாகும். 11

# தேர்தலுக்கான ஏற்பாடுகள் யாழ்ப்பாணத்தில் பூர்த்தி!

- சி. சிலக்சன் -

யாழ்ப்பாணம், நவ. 13

பாராளுமன்ற தேர்தலுக்கான ஏற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்று யாழ். மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் ம. பிரதீபன் தெரிவித்துள்ளார்.

நேற்று மாவட்ட செயலகத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். 11

# தனது அனுமதி பெறாமல் வேட்பாளராகப் பெயர்!

## யாழில் பெண் முறைப்பாடு

யாழ்ப்பாணம், நவ. 13

நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணத்தில் சுயேச்சை குழு ஒன்று தனக்குத் தெரியாமலேயே தனது பெயரை வேட்பாளராக் குறிப்பிட்டுள்ளது என்று கூறி பெண் ஒருவர் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் 11

# அரசியல்வாதிகளின் ஊழல் மோசடி குறித்து விசாரணை

கொழும்பு, நவ. 13

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் கடந்த காலங்களில் இடம்பெற்றுள்ள ஊழல் மோசடி தொடர்பில் 15 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. அரசியல்வாதிகள் தங்களின் உறவினர்களை பணியகத்தில் தங்கவைத்துக்கொண்டு நிதி மோசடி செய்துள்ளமை தொடர்பிலும் தகவல் கிடைத் துள்ளது என்று இலங்கை வெளிநாட்டு 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இழுவைமடி மீன்பிடியை நிறுத்திவிட்டு வீதியில் இறங்கிப் போராடுங்கள்!

## இராமேஸ்வரம் மீனவர்களுக்கு வடக்கு மீனவர் சங்கம் பதிலடி!

யாழ்ப்பாணம், நவ. 13

சட்டவிரோதமாக எமது கடல் வளங்களை அழிக்கும் இழுவை மீன்பிடி தொழிலை நிறுத்தி விட்டு வீதியில் இறங்கி போராடுங்கள் என்று வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் ஊடகப் பேச்சாளர் அ. அன்னராசா தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டின் இராமேஸ்வரத்தில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மீனவர்கள் தொடர்பில் கருத்துரைத்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்துடன், மன்னார் தொடக்கம் யாழ்ப்பாணம், காரைநகர் வரை கடல் அட்டை பண்ணைகளுக்கான அனுமதிகளை வழங்கும்போது யாழ்ப்பாணத்தின் சில பிரதேச செயலகங்கள் முறையற்ற முறையில் நடந்து கொண்டுள்ளன. இதனை தகவல் அறியும் சட்ட மூலமாக அணுகிய போது ஒவ்வொரு பிரதேச செயலகமும் ஒவ்வொரு நிலைப்பாட்டில் மீனவர்களுக்கு பதில்களை வழங்கியுள்ளது என்றும் அவர் கூறினார்.

நேற்றைய தினம் கொக்குவிலில் நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார். (ஐ)

# இலங்கை என்பியல் சங்கத்தின் தலைவராக மருத்துவர் கோபிசங்கர்!



யாழ்ப்பாணம், நவ. 13

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் என்பு முறிவு சத்திர சிகிச்சை நிபுணர் தயாசிவம் கோபிசங்கர் இலங்கை என்பியல் சங்கத்தின் 2024 - 2025ஆம் ஆண்டுக்கான தலைவராக பதவியேற்றுள்ளார்.

கோபிசங்கர் யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரியின் பழைய மாணவனும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் பட்டதாரியும் ஆவார்.

தேசிய மருத்துவ சங்கம் ஒன்றுக்கு யாழ். போதானா மருத்துவமனையிலிருந்து தெரிவான முதல் மருத்துவ நிபுணர் இவரேயாவார்.

இவர், அண்மையில் நிறுவப்பட்ட சர்வதேச சத்திரசிகிச்சையாளர் சங்கத்தின் இலங்கைக்கான தலைவராகவும் கோபிசங்கர் செயல்பட்டு வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தேர்தல் முறைப்பாடுகள் 3 ஆயிரத்தை எட்டுகிறது!

கொழும்பு, நவ. 13

எதிர்வரும் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் தொடர்பில் இதுவரை (செப்ரெம்பர் மாதம் 26 ஆம் திகதி முதல் நேற்றுமுன்தினம் வரை) 2,999 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு 808 முறைப்பாடுகளும் மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு 2 ஆயிரத்து 135 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதேவேளை, மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு வன்முறை சம்பவங்கள் தொடர்பில் 21 முறைப்பாடுகளும் ஏனைய விடயங்கள் தொடர்பில் 35 முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன. (ஐ)

# மன்னார் மேய்ச்சல் தரை பிரச்னை; வடக்கு ஆளுநரிடம் மனு கையளிப்பு

மன்னார், நவ. 13

மன்னார் - நானாட்டான் மேய்ச்சல் தரை தொடர்பான பிரச்னைக்கு தீர்வு வழங்குமாறு கோரி கால்நடை வளர்ப்பாளர்கள் வடக்கு மாகாண ஆளுநரிடம் மனு ஒன்று கையளிக்கப்பட்டது.

நேற்று செவ்வாய்க்கிழமை வடக்கு ஆளுநர் நா. வேதநாயகனை சந்தித்த நானாட்டான் கால்நடை வளர்ப்பாளர்கள் சங்கத்தின் தலைவர், கால்நடை வளர்ப்பாளர்கள், மெசிடோ அமைப்பின் இணைப்பாளர், உறுப்பினர்கள் உள்ளிட்டவர்கள் இந்த மனுவை கையளித்தனர்.

நானாட்டான் பிரதேச கால்நடை வளர்ப்பாளர்களுக்கென ஒதுக்கப்பட்ட கட்டுக்கரை குளம் புல்லறுத்தான் கண்டல் பகுதி மேய்ச்சல் தரையில், சிலர் அடாத்தாக விவசாய செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர் என்று கால்நடை வளர்ப்பாளர்கள் தெரிவித்தனர்.

அத்துடன், இது தொடர்பில் மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டதையும் அவர்கள் சுட்டிக்காட்டினர். (ஐ)

# வளிமண்டலவியல் திணைக்கள இணையம்மீது சைபர் தாக்குதல்

கொழும்பு, நவ. 13

வளிமண்டலவியல் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம்மீது சைபர் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

கடந்த முதலாம் திகதி குறித்த சைபர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கணினி அவசர பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டமைக்கு அமைய சைபர் பாதுகாப்பு தொடர்பான மதிப்பீட்டு அறிக்கை கோரப்பட்டுள்ளதாக கணினி அவசரப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

குறித்த அறிக்கை கிடைத்த தன் பின்னர் உத்தியோகபூர்வ இணையத்தளத்தை வழமைக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கவுள்ளதாக கணினி அவசர பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ஐ)

# தேர்தல் கடமையில் ஈடுபடுவோருடன் தெரிவத்தாட்சி அலுவலர் உரையாடல்!

யாழ்ப்பாணம், நவ. 13

நாளைய தினம் தேர்தல் கடமைகளில் ஈடுபடும் அரச உத்தியோகத்தர்களுக்கும் யாழ். தெரிவத்தாட்சி அலுவலர் ம. பிரதீபனுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

யாழ். மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது. இதன்போது தேர்தல் கடமைகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்கள் மேற்கொள்ள வேண்டிய கடமைகள் தொடர்பில் தெளிவுபடுத்தப்பட்டது.

இந்தச் சந்திப்பில் யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணை யாளர் அமல்ராஜ் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ஐ)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
13.11.2024 புதன்கிழமை
பிலவ வருடம், ஐப்பசி 27

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## தமிழ் மக்களிடம் அன்பான வேண்டுகோள்

இலங்கையின் 17ஆவது பாராளுமன்றத்தைத் தெரிவு செய்வதற்கு நாளையதினம் மக்கள் வாக்களிக்கவுள்ளார்கள். வழமைக்கு மாறாக இந்தத் தடவை பாராளுமன்றத் தேர்தல் பிரசாரங்களின்போது பெரும் பாலான அரசியல் கட்சிகள் மற்றும் மக்கள் மத்தியில் உற்சாகம் குறைந்து காணப்பட்டதால் வாக்களிப்பு வீதம் குறைவாக இருக்குமோ என்ற சந்தே கம் எழுகிறது. ஜனாதிபதித் தேர்தலில் சுமார் 35 இலட்சம் வாக்காளர்கள் தங்களின் வாக்குரிமையை பயன்படுத்தவில்லை.

தேசிய மக்கள் சக்தி பாராளுமன்றத்தில் அறுதிப்பெரும்பான்மை ஆச னங்களைக் கைப்பற்றி அரசாங்கத்தை அமைக்கக்கூடிய வாய்ப்பு இருக் கிறது. ஆனால், பாராளுமன்றத்தில் பலம் பொருந்திய எதிர்க்கட்சியாக செயல்படுவதற்கு ஆணை தருமாறு மக்களைக் கேட்கும் எதிரணி கட்சிக ளுக்கு எந்தளவு ஆசனங்கள் கிடைக்கும் என்பதை ஊகிப்பது சற்று சிரமமாக இருக்கிறது.

இரு மாதங்களுக்கும் குறைவான காலத்துக்கு முன்னர் ஜனாதிபதித் தேர்தலில் மக்களால் நிராகரிக்கப்பட்ட முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ வும் தலைமை தாங்குகின்ற கூட்டணிகளின் பிரசாரங்கள் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் ஒன்றரை மாத கால நிருவாகத்தின்மீது குறைகண்டு பிடிப்பதிலேயே முழுமையாகக் கவனத்தைச் செலுத்தியி ருந்தன. அவை மக்கள் மத்தியில் எடுபட்டிருக்கக்கூடிய வாய்ப்பு இல்லை.

இது இவ்வாறிருக்க, வடக்கு - கிழக்கில் முன்னென்றும் இல்லாத அளவுக்கு அரசியல் கட்சிகளும் சுயேச்சை குழுக்களும் போட்டியிடுவதால் நாளைய தினம் தெரிவு செய்யப்படவிருக்கும் பாராளுமன்றத்தில் ஓர் ஒழுங்கமைவான பிரதிநிதித்துவத்தை தமிழ் மக்கள் கொண்டிருக்கக்கூடிய வாய்ப்புப் பெரும்பாலும் இல்லை என்று அஞ்சப்படுகிறது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஐந்து தேர்தல் மாவட்டங்களிலும் 28 பாராளுமன்ற ஆசனங்களுக்காக கட்சிகளையும் சுயேச்சை குழுக் களையும் சேர்ந்த 2 ஆயிரத்து 67 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள். பெரும்பாலும் தமிழ்க் கட்சிகள் ஒவ்வொன்றும் ஓரிரு ஆசனங்களுடன் பாராளுமன்றம் செல்லக்கூடிய வாய்ப்பே இருக்கிறது.

அதனால் அடுத்த பாராளுமன்றத்தில் தமிழ் மக்களின் பிரச்னைக ளுக்காக குரல் கொடுப்பதற்கு ஒருமித்த அணுகுமுறையை கடைப்பிடிப்ப தற்காக இந்தக் கட்சிகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டிய அவசியம் தோன்றும். ஆனால், அதற்குத் தேவையான அரசியல் விவேகத்தையும் பக்குவத்தையும் அவர்கள் வெளிக்காட்டுவார்கள் என்று எதிர்பார்ப்பது கஷ்டமாக இருக்கிறது.

தமிழ் மக்களுக்கு உருப்படியான மாற்றுத் தெரிவு இல்லாமல் இருக் கின்ற துரதிர்ஷ்டவசமான சூழ்நிலையில் வடக்கு, கிழக்கில் போட்டியிடு கின்ற தமிழ் அரசியல் கட்சிகள் அல்லது கூட்டணிகள் மத்தியில் ஒப்பீட்டள வில் முக்கியமானவை என்று அடையாளப்படுத்தக் கூடியவையாக இலங்கை தமிழ் அரசு கட்சி, ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகியவையே விளங்குகின்றன.

இந்த அணிகளுக்கு இடையில் கொள்கை கோட்பாடுகளை பொறுத்த வரை பெரிதாக வேறுபாடுகள் இல்லை. தமிழ் மக்களின் அரசியல் விடு தலையே தங்கள் குறிக்கோள் என்று அவை பிரகடனம் செய்திருக்கின்றன. ஆனால், தமிழ் மக்களை பொறுத்தவரை, இன்று தேவைப்படுவது கடந்த கால அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு சமகால உள்நாட்டு மற்றும் சர்வதேச அரசியல் நிலைவரங்களுக்கு பொருத்தமான நடை முறைச் சாத்தியமானதும் விவேகமானதுமான அரசியல் அணுகு முறைகளை கடைப்பிடிக்கக்கூடிய அரசியல் அணியேயாகும்.


தமிழ் மக்கள் வாக்குரிமையை பயன்படுத்துவதில் விவேகமாக செயல் படுவார்கள் என்று 'ஈழநாடு' உறுதியாக நம்புகிறது. முக்கியமாக தமிழ் மக்களின் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை சிதறடிக்கும் நோக்குடன் பல்வேறு குழுக்களையும் களத்தில் இறக்கிய சக்திகளுக்கு தமிழ் மக்கள் முறையான பாடத்தை புகட்டவேண்டும் என்பதும் வாக்களிப்பில் அசமந் தம் காட்டாமல் அவர்கள் தங்கள் வாக்குரிமையை பயன்படுத்த வேண்டும் என்பதுமே எமது அன்பான வேண்டுகோளாகும்.

**வடமாகாண மரநடுகை மாதம்**
**கார்த்திகை - 2024**



"பொருட்களின் உண்மையான இயல்புகளை நாம் சரியாகக் கருத்திற்கொண்டால் ஒவ்வொரு மரமும் தங்கத்தினாலோ வெள்ளியினாலோ ஆக்கப்பட்டிருப்பதை விட அது பச்சையாக இருப்பதே அதி உன்னதமானது."
- மார்ட்டின் லூதர் (ஜேர்மனிய கத்தோலிக்க மதகுரு)

# வடமராட்சி வலய மாணவர் பாராளுமன்ற அமர்வு நடந்தது



வடமராட்சி, நவ. 13

வடமராட்சி கல்வி வலய மாணவர் பாராளுமன்ற அமர்வு நெல்லியடி மத்திய கல்லூரியில் நேற்று செவ் வாய்க்கிழமை நடைபெற் றது.

வடமராட்சி கல்வி வலய பிரதி கல்விப் பணிப்பாள ரும் மாணவர் பாராளுமன்ற செயலாளர் நாயகமுமான ப. அருந்தவச்செல்வம் தலைமை யில் இந்த நிகழ்வு நடை பெற்றது.

முதலில், விருந்தினர்கள் வரவேற்கப்பட்டு, மங்கல விளக்கேற்றப்பட்டு நிகழ்வு ஆரம்பமானது. தொடர்ந்து வடமராட்சி கல்வி வலய மாணவர் பாராளுமன்றத்துக் கான சபாநாயகர் தெரிவு நடைபெற்றது.

சபாநாயகராக ஹாட்லிக் கல்லூரி மாணவன் சிவ கணேசன் அனந்திகன் தெரிவு செய்யப்பட்டு, அமர்வுகள் நடைபெற்றன.

மாணவர் பாராளுமன்ற உறுப்பினர்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது பிரேரணைகளை முன்வைத்தனர். இதைத் தொடர்ந்து அடுத்த அமர்வு திகதி தீர்மானிக்கப்பட்டு அமர்வு நிறைவுற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக துணுக்காய் கல்வி வலய பிரதி கல்விப் பணிப்பாளர் நீரஜா மயூர தாசன், சிறப்புவிருந்தினராக நெல்லியடி மத்திய கல்லூரி அதிபர் கணேசரட்ணம் கிருஷ்ணகுமார், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பா ளர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் வடமராட்சி வலய பாடசாலை அதிபர் கள், ஆசிரியர்கள், மாணவர் கள், பெற்றோர் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ-02)

## வடக்கு கடலில் 12 இந்திய மீனவர் கைது!

யாழ்ப்பாணம், நவ. 13

பருத்தித்துறையை அண் மித்த கடற்பகுதியில் அத்து மீறி மீன்பிடியில் ஈடுபட்ட 12 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனரென இலங்கை கடற்படைப் பேச்சாளர் தெரிவித்தார்.

நேற்று செவ்வாய்க் கிழமை அதிகாலை பருத்தித் துறையை அண்மித்த கடற் பரப்பில் அத்துமீறி கடற் றொழிலில் ஈடுபட்டபோது குறித்த 12 இந்திய மீனவர்க ளும் கைதுசெய்யப்பட்ட துடன் அவர்கள் பயணித்த படகும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது. (அ)

## நெடுந்தீவுக்கு நாளை விசேட படகு சேவை


யாழ்ப்பாணம், நவ. 13

பாராளுமன்றத் தேர்தல் தினமான நாளை நெடுந்தீவு மக்கள் வாக்களிக்க வசதியாக விசேட படகு சேவை நடை பெறவுள்ளது.

காலை 6.45 மணிக்கு வட தாரகை, காலை 7 மணிக்கு சமுத்திரதேவா, முற்பகல் 10.30 மணிக்கு குமுதினி, முற் பகல் 11.30 மணிக்கு கரி கணன் (தனியார்), மதியம் ஒரு மணிக்கு குமுதினி, பிற் பகல் 3 மணிக்கு சமுத்திர தேவா, பிற்பகல் 4.30 மணிக்கு வடதாரகை ஆகிய படகுகள் நெடுந்தீவு துறையிலிருந்து சேவையை வழங்கும்.

இதேபோன்று, குறி காட்டுவான் துறையிலிருந்து காலை 8 மணிக்கு வட தாரகை, காலை 8.15 மணிக்கு சமுத்திரதேவா, முற்பகல் 11.30 மணிக்கு குமுதினி, மதியம் ஒரு மணிக்கு கரிக ணன் (தனியார்), பிற்பகல் 2.30 மணிக்கு குமுதினி, பிற்ப கல் 4 மணிக்கு சமுத்திர தேவா, மாலை 5.30 மணிக்கு வடதாரகை படகு சேவைகள் நடைபெறும் என்று நெடுந் தீவு பிரதேச செயலாளர் திரு மதி நிவேதிகா கேதீஸ்வரின் அறிவித்துள்ளார். (ஐ-5)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**

கணவன்-மனைவிக்குள் அனுசரித்துப் போவது நல்லது. திடீர் பயணங்கள் மற்றும் செலவுகளால் திணறுவீர்கள். உறவினர்களால் மனஸ்தாபங்கள் வந்து நீங்கும். வாகனத்தில் கவனம் தேவை.

**இடபம்**

ஆன்மிகப் பெரியோரின் ஆசிகிட்டும். பெற்றோரின் ஆதரவு பெருகும். மற்றவர்களுக்காக சில செலவுகளை செய்து பெருமைப்படுவீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் உதவுவார்கள்.

**மிதுனம்**

சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயல்படுவீர்கள். உறவினர் நண்பர்களால் அனுகூலம் உண்டு. நெடுநாட்களாக நீங்கள் பார்க்க நினைத்த ஒருவர் உங்களை தேடி வருவார்.

**கடகம்**

குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள். புண்ணிய ஸ்தலம் சென்று வருவீர்கள். பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**சிம்மம்**

சந்திராஷ்டமம் நீடிப்பதால் சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும் அத்தியாவசிய செலவுகள் அதிகமாகும். அவசரப்பட்டு அடுத்தவர்களின் விவகாரங்களில் தலையிட வேண்டாம்.

**கன்னி**

தன் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். மனைவி வழியில் ஒத்துழைப்பு அதிகரிக்கும். விலை உயர்ந்த ஆபரணங்களை வாங்குவீர்கள்.

**துலாம்**

கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர் நண்பர்களின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி தங்கும். வழக்கில் வெற்றி பெறுவீர்கள். திட்டங்களை தீட்டுவீர்கள்.

**விருட்சிகம்**

புதிய திட்டங்கள் நிறைவேறும். பிள்ளைகளின் வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். ஆடம்பர செலவுகளை குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள். கனவு நனவாகும் நாள்.

**தனுசு**

எதிர்ப்புகள் அடங்கும். தாய்வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். பழைய கடனைப் பற்றி அவ்வப்போது யோசிப்பீர்கள். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**மகரம்**

குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். பூர்வீக சொத்து பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும். உறவினர்கள் பாராட்டும்படி நடந்துகொள்வீர்கள். சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள்.

**கும்பம்**

கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். அழகும் இளமையும் கூடும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும்.

**மீனம்**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒரே நாளில் முக்கியமான நான் கைந்து வேலைகளை பார்க்க வேண்டி வரும். தேவையற்ற வீண் அலைச்சல் அதிகரிக்கும்விழிப்புடன் இருக்க வேண்டிய நாள்.

# யாழில் 'சீத்துவக்கேடு' நூல் அறிமுகவிழா






யாழ்ப்பாணம், நவ. 13

காரைக்கவி கந்தையா பத்மானந்தன் எழுதிய சீத்துவக்கேடு என்ற "தொலைந்துவிட்ட வாழ்வியல் நினைவுகள்" பற்றிய கட்டுரைகளின் தொகுப்பு நூலின் அறிமுக விழா ஞாயிற்றுக்கிழமை நல்லை ஆதீன மண்டபத்தில் காரை சுந்தரம்பிள்ளை பெயரால் அமைந்த அரங்கில் மண்டபம் நிறைந்த பார்வையாளர்களுடன் சிறப்பாக நடைபெற்றது.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் செந்தமிழ்ச் சொல்லருவி சந்திரமெளலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் நா. வேதநாயகனும் கௌரவ விருந்தினராக வடமாகாண பிரதம செயலாளர் இ. இளங்கோவனும் சிறப்பு விருந்தினர்களாக ஜீவநதி சஞ்சிகை ஆசிரியர் க. பரணீதரன், எங்கட புத்தகங்கள் குழும நிறுவுநர் கு. வசீகரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் வரவேற்புரையை கவிஞர் காரை வ. வடிவழகையனும் வாழ்த்துரையை பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜாவும் முகப்புரையை வாழ்நாள் பேராசிரியர் வ. மகேஸ்வரனும் நயவுரையை கவிஞர் சோ. பத்மநாதனும் ஆற்றினர்.

நூலின் முதற்பிரதியை மூத்த ஆசிரியர் பராசக்தி கந்தையா வெளியிட்டு வைக்க ஆளுநர் நா. வேதநாயகன் பெற்றுக் கொண்டார்.

நிகழ்வில் காரைக்கவி சார்பில் பதிப்பு துறையில் சாதனை படைத்து வரும் ஜீவநதி பதிப்பாசிரியர் கலாமணி பரணீதரனுக்கு பதிப்புச் சித்தர் என்ற கௌரவப்பட்டதை ஆளுநர் வழங்கிச் சிறப்பித்தார்

நிகழ்வில் பேராசிரியர் இரகுபரன், மருத்துவர் சத்தியமூர்த்தி, எழுத்தாளர்கள், பாடசாலை அதிபர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

(எ)

# நீரிழிவு நோயாளிகளை இனங்காண கிளிநொச்சியில் பரிசோதனைகள்

கிளிநொச்சியில், நவ. 13

உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு கிளிநொச்சியில் நீரிழிவு நோயாளிகளை இனங்காணும் பரிசோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

பரந்தன் பகுதியில் கண்டாவளை பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் ஏற்பாட்டில் மாவட்ட தொற்றா நோய்ப் பிரிவு மருத்துவர் க. றஞ்சன் தலைமையில் நீரிழிவு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

வர்த்தக நிலையங்களில் பணிபுரிவோர் மற்றும் பேருந்துக்காக காத்து நின்ற மக்களிடம், நீரிழிவு பரிசோதனை இடம் பெற்றது.

இதன் மூலம், பல நீரிழிவு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

நாளை மறுதினம் 15 ஆம் திகதி வரை, நீரிழிவு வாரமாக பிரகடனப்படுத்தி, நோயாளர்கள் இனங்காணப்படவுள்ளனர்.

அந்தவகையில், கண்டாவளை வைத்திய அதிகாரி பிரிவில், குறித்த வாரத்தில் காலை 8. 30 மணி முதல் மக்கள் பரிசோதனையை மேற்கொண்டு நீரிழிவு நோய் நிலைமையை அறிந்து கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ)

# டெங்கு நோய் தொடர்பில் விழிப்புடன் செயல்படுக!

## தொற்று நோயியல் பிரிவு அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், நவ. 13

கொழும்புத்துறையில் 21 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் தொற்று நோயியல் பிரிவு மருத்துவ அதிகாரி தாரணி குருபரன் தெரிவித்தார்.

எனவே, டெங்கு நோய் தொடர்பில் மக்கள் விழிப்புடன் செயல்பட வேண்டும் எனவும் அவர் அறிவுறுத்தினார்.

யாழ்ப்பாணத்தில் நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

(எ)

# யாழில் கார் - பட்டா விபத்தில் சுற்றுலா வந்த பெண் மரணம்

யாழ்ப்பாணம், நவ. 13

தென்பகுதியிலிருந்து சுற்றுலாவுக்காக யாழ்ப்பாணம் வந்தவர்களின் கார் மீது பட்டா ரக வாகனம் மோதியதில் பெண்ணொருவர் உயிரிழந்தார். கம்பஹாவைச் சேர்ந்த குசும் புஸ்பராணி ரணசிங்க வீரக்கொடி(வயது -60) என்ற பெண்ணே உயிரிழந்தார்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் சுற்றுலாவுக்காக யாழ்ப்பாணம் வந்தனர். இதன்போது, தெல்லிப்பழை சந்திக்கும் பொலிஸ் நிலையத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் பட்டாரக வாகனமும் காரும் மோதி விபத்து சம்பவித்தது.

இதில் படுகாயமடைந்த குறித்த பெண் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இருப்பினும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார்.

அவரது சடலம் மீதான விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் சடலம் ஒப்படைக்கப்பட்டது.

(எ-05)

# யாழ்ப்பாணத்தில் கிணற்றிலிருந்து குடும்பஸ்தரின் சடலம் மீட்கப்பட்டது

யாழ்ப்பாணம், நவ. 13

யாழ்ப்பாணம் - மயிலங்காடு பகுதியில் தோட்ட கிணற்றிலிருந்து குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது. மயிலங்காடு, எழாலை தெற்கு பகுதியைச் சேர்ந்த சுவாம்பிள்ளை [illegible] (வயது 46) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

இவர் கடந்த சனிக்கிழமை வீட்டிலிருந்து புறப்பட்டு சென்றிருந்தார். இந்த நிலையில் இரண்டு தினங்களாக அவரை காணாத உறவினர்கள் தேடுதலில் ஈடுபட்டு வந்தனர். இவ்வாறான சூழ்நிலையில் அவரது சடலம் தோட்டக்கிணறு ஒன்றில் இருந்து மீட்கப்பட்டது.

சடலம் மீதான விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

(எ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 64 ஆயிரம் பொலிஸார் பாதுகாப்பு பணிகளில்!

கொழும்பு, நவ. 13

**பொதுத் தேர்தலின் பாதுகாப்பு பணியில் நேற்று முதல் பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இதற்காக, நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள அனைத்து வாக்களிப்பு நிலையங்களிலும் சுமார் 64,000 பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மேலும், 3,200 பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகள் கடமைக்காக தயார்படுத்தப்பட்டுள்ளனர்.

12,227 சிவில் பாதுகாப்புப் பணியாளர்கள் நேரடியாக தேர்தல் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

மொத்தம் 13,314 தொகுதிகளுக்கு 13,383 வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

சுதந்திரமானதும் அமைதியானதுமான தேர்தலை நடத்துவதற்கு தேவையான ஒத்துழைப்பை அனைவரும் வழங்க வேண்டும்-என்றார். (அ)



## பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள 18 வாகனங்கள் குறித்து விசாரணை!

கொழும்பு, நவ. 13

உரிமையாளர்கள் இல்லாத சுமார் 18 வாகனங்கள் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இந்த வாகனங்கள் தொடர்பில் பொதுமக்கள் தகவல் வழங்கிய நிலையில், முன்னெடுக்கப்பட்ட விசாரணைகள் மூலம் உரிமையாளர்கள் இல்லாத விடயம் தெரிய வந்துள்ளது.

மேலும் எதிர்காலத்தில் ஏனைய தரப்புக்களின் ஒத்துழைப்புடன் இந்த வாகனங்கள் தொடர்பிலான விரிவான விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் நிஹால் தல்துவ தெரிவித்தார். (அ)

## சீன பெண்கள் இருவர் கைது!

கொழும்பு, நவ. 13

சுற்றுலா விசாவில் இலங்கைக்கு வந்து வியாபாரம் செய்து கொண்டிருந்த வெளிநாட்டவர்கள் இருவர், கண்டி பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 47 மற்றும் 48 வயதான சீன பிரஜைகள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் கண்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் இன்று முதல் மழைக்கு சாத்தியம்

கொழும்பு, நவ. 13

காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக இன்று முதல் எதிர்வரும் சில தினங்களில் மாலை வேளையில் மழை பெய்யலாம் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

தென்மேற்கு வங்கக்கடல் பகுதியில் குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் உருவாக வாய்ப்பு உள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக இன்று முதல் எதிர்வரும் சில தினங்களில் மாலை வேளையில் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடிய சாதகமான வளிமண்டல நிலைமையை எதிர்பார்க்கலாம் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வட மாகாணத்தில் பல தடவைகள் மழை பெய்யக் கூடும் அதேவேளை ஏனைய பிரதேசங்களில் மாலை அல்லது இரவு வேளைகளில் சில இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுவதுடன் கிழக்கு, மத்திய, ஊவா, சப்ரகமுவ மற்றும் தென் மாகாணங்களின் சில பகுதிகளில் 50 மில்லி மீற்றருக்கும் அதிகளவான ஓரளவு பலத்த மழை பெய்யக்கூடும் என வகுறிப்பிடப்பட்டுள்ளது.

## சிறிய மற்றும் நடுத்தர தொழில்துறைகளுக்கு சலுகை வழங்குவது குறித்து கலந்துரையாடல்

கொழும்பு, நவ. 13

சிறிய மற்றும் நடுத்தர தொழில்துறைகளுக்கான சலுகை வழங்குவது குறித்து, நிதி மற்றும் பொருளாதார விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ஜி.என். ஆர்.டி அபொன்சு மற்றும் இலங்கை வங்கிகள் சங்கம், நிதி அமைச்சின் அதிகாரிகள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் அதிகாரிகளுக்கு இடையிலான கலந்துரையாடல் நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

சிறிய மற்றும் நடுத்தர தொழில்துறையினர் கடன் சுமையால் எதிர்நோக்கும் பிரச்னைகள் குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டது.

பராட்டே சட்டத்திற்கு விதிக்கப்பட்ட இடைக்கால தடையுத்தரவு எதிர்வரும் டிசெம்பர் 15 ஆம் திகதியுடன் காலாவதியாகும் நிலையில் இது தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து இக் கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது.

பொருளாதாரத்தின் உற்பத்தித் திறனை மேம்படுத்த வங்கித் துறைக்கு வழங்கக்கூடிய ஆதரவு மற்றும் தற்போது சிறிய மற்றும் நடுத்தர தொழில்துறையினர் பெற்றுக்கொண்டுள்ள கடன்கள் குறித்தும் இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டது.

சிறிய மற்றும் நடுத்தர தொழில்துறையினர் வங்கிகளில் பெற்ற கடன் தொடர்பான அறிக்கையொன்றைத் தயாரிக்கவும் இக் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது. (அ)

## மியன்மார் சைபர் முகாம்களுக்காக டுபாயிலுள்ள இலங்கையர்கள் குறி!

கொழும்பு, நவ. 13

மியான்மரில் உள்ள சைபர் குற்றவியல் முகாம்களுக்கு இலங்கையர்கள் அனுப்பப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருவது தொடர்பில் தேசிய மனித கடத்தல் தடுப்பு பணிக்குழு எச்சரிக்கை விடுத்துள்ளது.

தேசிய மனித கடத்தல் தடுப்பு பணிக்குழுவின் கூற்றுப்படி,

இலங்கைப் பிரஜைகள், குறிப்பாக ஐக்கிய அரபு எமிரேட்ஸில் வசிப்பவர்கள் இவ்வாறு குறிவைக்கப்படுகின்றனர்.

தகவல் தொழில்நுட்பத் துறையில் அதிக சம்பளம் தரும் வேலைகளை பெற்றுத் தருவதாக கூறி இவ்வாறு மனித கடத்தல்கள் இடம்பெறுவதாக அண்மைய அறிக்கைகள் வெளிப்படுத்தியுள்ளன.

இலாபகரமான வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் என்ற போலிக்காரணத்தின் கீழ் திறமையான தகவல் தொழில்நுட்ப வல்லுநர்களை கடத்தல்காரர்கள் ஈர்க்கின்றனர்.

பாதிக்கப்பட்டவர்கள் டுபாய் போன்ற இடங்களுக்கு நேர்காணலுக்காக அழைத்துச் செல்லப்படுகிறார்கள், சட்டவிரோதமாக கொண்டு செல்லப்பட்ட அவர்கள் மியான்மரில் சைபர் குற்றவியல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட கட்டாயப்படுத்தப்படுகிறார்கள்.

இந்த சைபர் குற்றவியல் முகாம்கள் மீதான விசாரணைகள் கடுமையான மனித உரிமை மீறல்களை வெளிப்படுத்தியுள்ளன.

அங்கு பணியாளர்கள் கொடூரமான உடல் சித்திரவதைகளை எதிர்கொள்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்குமாறும், சுற்றுலா விசாக்களில் வெளிநாடு செல்வதைத் தவிர்க்குமாறும், வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களை மட்டுமே பயன்படுத்துமாறும் தேசிய மனித கடத்தல் தடுப்பு பணிக்குழு கேட்டுக் கொண்டுள்ளது.

இந்த வழிகாட்டுதல்களை மீறுவது சட்டவிரோத ஆட்கடத்தலுக்கான பாதிப்பை அதிகரிக்கலாம் மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகச் சட்டத்திற்கும் எதிரானது.

இதுபோன்ற சந்தேகத்திற்கிடமான நடவடிக்கைகள் ஏதேனும் இருந்தால், பொதுமக்கள் 0112102570/ 0768447700 என்ற தேசிய மனித கடத்தல் தடுப்பு பணிக்குழுவின் தொலைபேசி இலக்கம் மற்றும் nahttfsrilanka@gmail.com என்ற மின்னஞ்சல் மூலம் தொடர்பு கொண்டு அறிவிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

வழங்கப்பட்ட அனைத்து தகவல்களும் கடுமையான ரகசியத்தன்மையுடன் கையாளப்படும் என்றும் தேசிய மனித கடத்தல் தடுப்பு பணிக்குழு சுட்டிக் காட்டியுள்ளது. (அ)

## 20இற்கும் மேற்பட்ட வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் களத்தில்!

கொழும்பு, நவ. 13

பாராளுமன்றத் தேர்தல் கண்காணிப்பில் 20 இற்கும் மேற்பட்ட வெளிநாட்டு கண்காணிப்பாளர்கள் பங்கேற்கவுள்ளனர்.

தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின் பேரில் அவர்கள் ஏற்கனவே கண்காணிப்பு பணியை தொடங்கியுள்ளனர்.

இதேவேளை, தேர்தலுக்கான வாக்குப் பெட்டிகள் இன்று வாக்களிப்பு நிலையங்களுக்கு கொண்டு செல்லப்படவுள்ளன.

பாராளுமன்றத் தேர்தலுக்கான பிரசாரம் நேற்று முன் தினம் நள்ளிரவு நிறைவடைந்ததையடுத்து, தற்போது அமைதிக் காலம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. (அ)

தரமற்ற மருந்து விநியோக விவகாரம்

## 18 முன்னாள் அமைச்சர்களிடம் வாக்குமூலம் பெற உத்தரவு

கொழும்பு, நவ. 13

அரசாங்க வைத்தியசாலைகளுக்கு தரமற்ற மருந்துகளை விநியோகித்தமை தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தொடர்பில் 18 முன்னாள் அமைச்சர்களிடம் வாக்கு மூலம் பதிவு செய்யுமாறு மாளிகாகந்த நீதவான் லோச்சனி அபேவிக்ரம உத்தரவிட்டுள்ளார்.

கெஹெலிய ரம்புக்வெல சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்துக்கு அமைச்சரவையில் அங்கம் வகித்த முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் பிரதமர் தினேஷ் குணவர்தன, முன்னாள் அமைச்சர்களான டிரான் அலஸ், மகிந்த அமரவீர, விஜயதாச ராஜபக்ஷ, ஹரின் பெர்னாண்டோ, ரொஷான் ரணசிங்க, நிமல் சிறிபால டி சில்வா மற்றும் அமைச்சரவையை பிரதிநிதித்துவப்படுத்திய 18 பேரிடம் வாக்கு மூலங்களைப் பெறுவது அவசியம் என நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் லக்மினி கிரிஹாகம, இந்த விடயம் தொடர்பில் மாளிகாகந்தை நீதிமன்றில் உத்தரவு பிறப்பிக்குமாறு கோரியதையடுத்து, அதற்கு அனுமதியளித்து நீதவான் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார். (அ)

## வாக்காளர் அட்டை 97 வீதம் விநியோகம்

கொழும்பு, நவ. 13

பாராளுமன்றத் தேர்தல் தொடர்பில் கிடைக்கப்பெற்ற உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளதாக பிரதி தபால்மா அதிபர் ராஜித கே.ரணசிங்க தெரிவித் தார்

இதன்படி இதுவரை 97 வீத உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக பிரதி தபால்மா அதிபர் கூறினார்.

இதுவரை உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் கிடைக்காத வாக்காளர்கள், தமது பிரதேசத்தில் உள்ள தபால் நிலையத்திற்கு சென்று பெற்றுக்கொள்ளலாம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் பாராளுமன்றத் தேர்தலை முன்னிட்டு, வாக்காளர்கள் தங்களது வாக்காளர் அட்டைகளை அணுகுவதற்கு ஏதுவான, நிகழ்நிலை முறையை தேர்தல் ஆணைக்குழு அறிமுகப்படுத்தியுள்ளது.

அதன்படி, 'On-line Registration'. என்ற இணைப்பின் மூலம் வாக்காளர் அட்டைகளை பார்வையிடலாம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதுகாப்பு எச்சரிக்கையை அமெ. மீளப்பெறவேண்டும்!

## வெளிவிவகார அமைச்சு கோரிக்கை

கொழும்பு, நவ. 13

**மறு அறிவித்தல் வரை அறுகம்குடா பிரதேசத்தில் பயணிப்பதை தவிர்க்குமாறு விடுக்கப்பட்ட பாதுகாப்பு எச்சரிக்கை அறிவிப்பை வாபஸ் பெறுமாறு வெளிவிவகார அமைச்சு அமெரிக்க தூதரகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.**

எவ்வாறாயினும், இது தொடர்பில் இலங்கையில் உள்ள அமெரிக்க தூதரகத்திடம் இருந்து எந்த பதிலும் இல்லை என அரசாங்க தகவல்கள் தெரிவிக்கின்றன.

அறுகம்குடா பிரதேசத்தில் உள்ள பிரபல சுற்றுலாத் தலங்களை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தப்படவுள்ளதாக நம்பகமான தகவல் கிடைத்துள்ளதாக கடந்த மாதம் 23ஆம் திகதி அமெரிக்க தூதரகம் தனது பிரஜைகளுக்கு அறிவித்திருந்தது.

பின்னர் சம்பந்தப்பட்ட இடங்களில் பாதுகாப்பை பலப்படுத்த அரசு நடவடிக்கை எடுத்ததுடன், சம்பவம் தொடர்பாக 6 பேர் தற்போது காவலில் வைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மின்தூக்கி விழுந்து நான்கு பேர் காயம்!


கொழும்பு, நவ. 13

கிராண்ட்பாஸ் முதுர உயன அடுக்குமாடி குடியிருப்பு வளாகத்தில் மின்தூக்கி (லிப்ட்) சரிந்து விழுந்ததில் கிராண்ட்பாஸ் பொலிஸ் கான்ஸ்டபிள் உட்பட நால்வர் காயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என கிராண்ட்பாஸ் பொலிஸார் தெரிவித்தனர்.

கிராண்ட்பாஸ் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் கான்ஸ்டபிள் மின்தூக்கி சரிந்து விழுந்ததில் காலில் பலத்த காயங்களுக்கு உள்ளாகி கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் கூறினர்.

இந்த வீட்டுத் தொகுதியின் 5ஆவது மாடியில் உள்ளவர்கள் பிறந்தநாள் விழாவை நடத்தியுள்ளனர். அக்கம் பக்கத்தைச் சேர்ந்தவர்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில், பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டதாக கிடைத்த தகவலை அடுத்து, அங்கு விரைந்து சென்ற பொலிஸார் நிலைமையை விளங்கப்படுத்திவிட்டு மீண்டும் திரும்பியபோதே நான்காவது மாடியில் வைத்து மின்தூக்கி விழுந்துள்ளதாக விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது. (அ)

# மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு புதிய தலைவராக பேராசிரியர் திலக்!



கொழும்பு, நவ. 13

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் புதிய தலைவராக பேராசிரியர் திலக் ஹேவாவசம் பொறுப்பேற்றுள்ளார்.

இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் புவியியல் கற்கைகள் பிரிவில் புவி அறிவியல் பேராசிரியராக உள்ளார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சுற்றுச்சூழல் நிலைத்தன்மைக்கான நிலையத்தின் பணிப்பாளராகவும் பணியாற்றினார்.

பேராசிரியர் ஹேவாவாசம் சுவிட்சர்லாந்தின் பேர்ன் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# கொரிய தொழில் வாய்ப்பு கோரி தேங்காய் உடைத்து ஆர்ப்பாட்டம்

கொழும்பு, நவ. 13

வெளிநாட்டு தொழில் வாய்ப்புக்கள் இன்னும் வழங்கப்படவில்லை என தெரிவித்து இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்துக்கு முன்பாக சிலர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த ஆர்ப்பாட்டம் நேற்று முன் தினம் இடம்பெற்றது.

தமக்கு கொரிய தொழில் வாய்ப்புகள் வழங்கப்படவில்லை என கூறியே இவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு கோஷங்களையும் எழுப்பினர்.



மேலும் வேலை வாய்ப்பு வழங்கப்படவேண்டும் எனக் கூறி, பணியகம் முன் தேங்காய்களை உடைத்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

அத்துடன், இதற்கான தீர்வை எதிர்வரும் பத்து நாட்களுக்குள் வெளியிடுமாறு ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்தனர். (அ)

# சட்டவிரோத மதுபானத்தை அருந்திய இருவர் உயிரிழப்பு!

## பாதிக்கப்பட்ட மேலும் இருவர் வைத்தியசாலையில்

கொழும்பு, நவ. 13

எல்பிட்டிய - பிட்டிகல பகுதியில் சட்டவிரோத மதுபானத்தை அருந்திய இருவர் உயிரிழந்துள்ளதுடன், பாதிக்கப்பட்ட மேலும் இருவர் எல்பிட்டிய மற்றும் கராப்பிட்டிய வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சம்பவத்தில் மத்தக பகுதியைச் சேர்ந்த இருவரே உயிரிழந்தனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த 4 பேரும் அண்மையில், வீடொன்றிலிருந்த சட்டவிரோத மதுபானத்தை அருந்தியிருந்தனர் எனவும், இதனைய டுத்து, ஏற்பட்ட ஒவ்வாமை காரணமாக் குறித்த நால்வரும் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# சுகாதார அமைச்சு அதிகாரியின் பெயரை பாவித்து பண மோசடி!

## உடனடி விசாரணை ஆரம்பம்

கொழும்பு, நவ. 13

திட்டமிட்ட குற்றச் செயல்களில் ஈடுபடும் சில தரப்பினரால் சுகாதார அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவரின் பெயரை பயன்படுத்தி பணம் சேகரிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் தகவல் வெளியாகியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சுகாதார அமைச்சின் அதிகாரிகள் தொலைபேசி, வட்ஸ்அப் ஊடாக அல்லது எந்த ஊடகம் வழியாகவும் நிதி சேகரிப்பதில்லை என சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இவ்வாறான மோசடிகாரர்களிடம் ஏமாந்து வங்கிக் கணக்குகளில் பணத்தை வைப்பிலிடவோ அல்லது வேறு வழிகளில் பணத்தை அனுப்பவோ வேண்டாமெனவும் மோசடியாளர்களை சட்டத்தின் முன் நிறுத்த ஒத்துழைப்பு வழங்குமாறும் சுகாதார அமைச்சு பொது மக்களுக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

# ரயிலில் பயணித்த யுவதி தவறி விழுந்து படுகாயம்!

கொழும்பு, நவ. 13

ஹப்புத்தளை ரயில் நிலையத்தில் நேற்றுக் காலை ரயிலில் பயணித்த யுவதி ஒருவர் தவறி விழுந்து படுகாயமடைந்துள்ளதாக ஹப்புத்தளை பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு கோட்டையில் இருந்து பதுளை நோக்கி பயணித்த 1045 இலக்க இரவு தபால் ரயிலில் யுவதி பயணித்துள்ளார்.

விபத்தில் காயமடைந்தவர் ரத்கம, அரலிய உயன மாவட்டவில பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய பல்கலைக்கழக மாணவி என பொலிஸார் கூறினர்.

அவர் உட்பட 18 பேர் எல்ல பிரதேசத்துக்கு சுற்றுலா சென்று கொண்டிருந்தபோது, ஹப்புத்தளை ரயில் நிலையத்தில் காலை 6.30 மணியளவில் ரயிலில் இருந்து இறங்கிய அவர், மீண்டும் ரயிலில் ஏறச் செல்லும் போது அதிலிருந்து தவறி விழுந்துள்ளார்.

அவர் கீழே விழுந்தபோது அவரது இடது காலின் மேல் ரயில் ஏறியதால் படுகாயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# காணாமல்போயிருந்த மூதாட்டி வனப்பகுதியில் சடலமாக மீட்பு!

கொழும்பு, நவ. 13

கண்டி, பூஜாபிட்டிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள வனப்பகுதியிலிருந்து மூதாட்டி ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பூஜாபிட்டிய பொலிஸார் தெரிவித்தனர். கண்டி, அம்பதென்ன பிரதேசத்தைச் சேர்ந்த 82 வயதுடைய மூதாட்டி ஒருவரே [illegible]

மூதாட்டி கடந்த 8 ஆம் திகதியிலிருந்து காணாமல்போயிருந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் பிரேதப் பரிசோதனைக்காகக் கண்டி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை கோடீஸ்வர வர்த்தகர்கள் தேர்தலில் ஈடுபடும் வீதத்தில் வீழ்ச்சி!

## பவ்ரல் அமைப்பு சுட்டிக்காட்டு

கொழும்பு, நவ. 13

**இலங்கையில் தற்போது நிலவும் அரசியல் சூழலில் பலன்களை எதிர்ப்பார்க்க முடியாது என்பதால் சில மனக்கசிவுகள் மற்றும் பொருளாதார நெருக்கடி போன்ற காரணங்களை மையமாகக் கொண்டு கோடீஸ்வர வர்த்தகர்கள் உள்ளிட்ட பிரபுக்கள் வேட்பாளர்களின் தேர்தல் பிரசாரங்களுக்கு ஆதரவு வழங்குவது 70 வீதத்தால் வீழ்ச்சியடைந்துள்ளதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி கூறியுள்ளார்.**




அநேகமான வேட்பாளர்களின் பிரசார நடவடிக்கைகளில் மந்தமான ஒரு நிலை ஏற்பட்டுள்ளமைக்கான முக்கிய காரணம் இதுவே எனவும் வெளிநாடுகளில் உள்ள பிரபுக்களும், வர்த்தகர்களும் கூட தேர்தல் வேட்பாளர்களின் பிரசாரங்களுக்கு உதவும் மனநிலையில் இல்லை எனவும் தேர்தல் கண்காணிப்பு நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில், பிரசார விளம்பரங்களுக்காக பணம் செலவிடுவதும் இரண்டு மடங்கால் குறைவடைந்துள்ளதாக கூறும் பவ்ரல் அமைப்பு, அநேகமான வேட்பாளர்கள் தங்களது பிரசாரங்களுக்காக சமூக வலைத்தளங்களை பயன்படுத்துவதை காணக்கூடியதாக உள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவினால் தேர்தலுக்குரிய செலவு வரம்புகள் விதிக்கப்படுவதும், விளம்பரங்களுக்கு பணம் செலவழிப்பது குறைவதற்கு மற்றொரு காரணம் என தெரியவந்துள்ளது.

இந்நிலையில், வேட்பாளர்கள் வீடு வீடாகச் சென்று பிரசாரம் செய்வது அதிகரித்துள்ளதாக தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் சுட்டிக்காட்டுகின்றன. (அ)

# சிறைக்குள் சூதாட அனுமதித்த பொலிஸார் மூவர் கைதாகினர்!

கொழும்பு, நவ. 13

அநுராதபுரம் - தலாவ கிரநேகம பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உள்ளிட்ட 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் சிலருக்கு சிறைக்கூடத்தில் சூதாட அனுமதியளித்த குற்றச்சாட்டிலேயே குறித்த மூவரும் கைதாகினர்.

கைதானவர்களில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு மேலதிகமாக கான்ஸ்டபிள் மற்றும் சார்ஜன்ட் ஆகியோர் அடங்குகின்றனர். கைதானவர்கள் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர். (அ)

# 7 கோடி ரூபா பெறுமதியான மாணிக்கக் கல் கொள்ளை!

கொழும்பு, நவ. 13

மாத்தளை - லக்கல பகுதியிலுள்ள, மாணிக்கக்கல் வர்த்தகர் ஒருவரின் வீட்டில் 7 கோடி ரூபாய் பெறுமதியான மாணிக்க கல் கொள்ளையிடப்பட்டுள்ளது.

5 பேர் கொண்ட குழு அந்த வர்த்தகர் மற்றும் அவரது மனைவி ஆகியோரை துப்பாக்கி முனையில் அச்சுறுத்தி இந்த கொள்ளையில் ஈடுபட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதேநேரம், குறித்த கொள்ளைக் குழுவினர் வர்த்தகரின் வீட்டில் இருந்து காரில் தப்பிச் சென்றுள்ளனர்.

குறித்த கொள்ளை நடவடிக்கையின்போது, வர்த்தகர் மற்றும் அவரது மனைவியின் கைகள் கட்டப்பட்ட நிலையில் இருந்தாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

அவர்கள் தப்பிச் சென்ற கார் கலேவல பகுதியில், கைவிடப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளது. (அ)

# ஒக்ரோபர் மாதம் மட்டும் 2,938 டெங்கு நோயாளர்கள்




கொழும்பு, நவ. 13

கடந்த மாதம் 2 ஆயிரத்து 938 டெங்கு நோயாளர்கள் நாட்டில் இனங்காணப்பட்டுள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டில் இவ்வாண்டின் இதுவரையான காலப்பகுதியில் 43 ஆயிரத்து 416 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக, சுகாதார அமைச்சு கூறியுள்ளது.

சுகாதார அமைச்சினால் நேற்று வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி இம்மாதம் 1067 டெங்கு நோயாளர்களும், ஒக்டோபர் மாதம் 2 ஆயிரத்து 938 டெங்கு நோயாளர்களும், செப்டம்பர் மாதம் 2 ஆயிரத்து 769 நோயாளர்களும், ஆகஸ்ட் மாதம் 3 ஆயிரத்து 897 டெங்கு நோயாளர்களும், ஜூலை மாதம் 4 ஆயிரத்து 506 டெங்கு நோயாளர்களும், ஜூன் மாதம் 3 ஆயிரத்து 319 டெங்கு நோயார்களும், மே மாதம் 2 ஆயிரத்து 647 பேரும், ஏப்ரல் மாதம் 2 ஆயிரத்து 234 பேரும், மார்ச் மாதம் 3 ஆயிரத்து 615 பேரும், பெப்ரவரி மாதம் 6 ஆயிரத்து 7 பேரும், ஜனவரி யில் 10 ஆயிரத்து 417 பேரும் டெங்கு நோயாளர்களாக இனங் காணப்பட்டுள்ளதாக அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை மேல் மாகாணத்தில் 18 ஆயிரத்து 554 பேரும், வடமாகாணத்தில் 4 ஆயிரத்து 914 பேரும், டெங்கு நோயாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர். அத்துடன் இவ் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் மாத்திரம் 20 பேர் டெங்கு நோயால் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சனல் 4 இல் ஆசாத் மௌலானா வெளியிட்ட கருத்துகள் குறித்து விசாரணை ஆரம்பம்!

கொழும்பு, நவ. 13

பிரித்தானியாவின் செனல் 4 ஊடகத்தில் ஒளிபரப்பப்பட்ட ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பான ஆவணப்படத்தில் ஆசாத் மௌலானா என்ற நபர் தெரிவித்த சர்ச்சைக்குரிய உள்ளடக்கங்கள் குறித்து குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இது தொடர்பான விசாரணை கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றில் நேற்று முன் தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது, குறித்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகக் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்திடம் அறிவித்துள்ளது. (அ)

# ஜோன்ஸ்டனின் பி.எம்.டபிள்யூ. கார் வழக்கு; சி.சி.ரி.வி. காட்சிகளைப் பாதுகாக்க உத்தரவு

கொழும்பு, நவ. 13

ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்குச் சொந்தமான குறித்த பி.எம்.டபிள்யூ. கார் நிறுத்தப்பட்டிருந்த கொழும்பு ஹில்டன் ஹோட்டலின் சிசிரிவி காட்சிகளை பாதுகாப்பாக வைக்குமாறு கோட்டை நீதவான் தனுஜா லக்மாலி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்களம் நீதிமன்றில் முன்வைத்த கோரிக்கையை பரிசீலித்த நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார். இது தொடர்பான சிசிரிவி காட்சிகளை விசாரணைக்கு ஆதாரமாக முன்வைக்க தயார் என குற்றப் புலனாய்வு திணைக்களம் நீதிமன்றில் தெரிவித்துள்ளது.

இதன்படி, குற்றப் புலனாய்வுத் திணைக்களம், சிசிரிவி சாட்சியங்களைப் பாதுகாப்பதற்கு உத்தரவு பிறப்பிக்குமாறு நீதிமன்றில் கோரிக்கை விடுத்துள்ளது. அத்துடன், குற்றப் புலனாய்வுத் திணைக்களம், விசாரணையின் முன்னேற்றத்தை நீதிமன்றத்திற்கு அறிவித்ததுடன், குறித்த வாகனத்தை நீதிமன்றக் காவலில் வைக்குமாறு நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது. நீதிமன்ற வளாகத்தில் இடம் குறைவாக இருப்பதால், வாகனத்தை குற்றப் புலனாய்வு திணைக்கள வளாகத்தில் தடுத்து வைக்குமாறு நீதவான் தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, அவரது சாரதிகள் இருவர் மற்றும் வாகனத்தை எடுத்துச் சென்றதாக கூறப்படும் நபரின் உறவினர் ஒருவரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இந்த வாகனம் கொழும்பு ஹில்டன் ஹோட்டலின் தரிப்பிடத்தில் நிறுத்தப்பட்டிருந்த நிலையில், குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அதனைக் கைப்பற்றி விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ)

# அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் இளையோர் சிறப்புத் தூதர் இலங்கைக்கு!

கொழும்பு, நவ. 13

அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் உலக இளையோர் பிரச்சினைகளுக்கான சிறப்பு தூதர், அபி பின்கெனவர் இலங்கை மற்றும் நேபாளத்துக்கு விஜயம் செய்யவுள்ளார்.

நேற்று முதல் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை அபி பின்கெனவர் இலங்கை மற்றும் நேபாளத்திற்கான விஜயத்தை மேற்கொள்கின்றார்.



அபி பின்கெனவரின் விஜயமானது, தெற்காசிய இளையோர் தலைவர்களை ஊக்குவிப்பதில் அமெரிக்காவின் அர்ப்பணிப்பை உணர்த்துவதோடு, குடியுரிமை பங்கேற்பு மற்றும் இளையோரின் தலைமைத்துவம், கலாச்சாரப் பாதுகாப்பு மற்றும் சமூக நெகிழ்வுத்தன்மை போன்ற முக்கிய பிரச்சினைகள் குறித்த ஒத்துழைப்பை வளர்க்கும் நோக்கத்தையும் கொண்டுள்ளது.

இலங்கையில், அமெரிக்க தூதரகம் மற்றும் இலங்கையின் கூட்டுறவின் மூலம் கல்வி, தலைமைத்துவம் மற்றும் குடியுரிமை பங்கேற்பு போன்ற துறைகளில் இளம் தலைவர்களை ஊக்குவிக்கும் திட்டங்களின் தாக்கத்தை சிறப்பு தூதர் பின்கெனவர் இந்த விஜயத்தின் போது அவதானிப்பார். (அ)

# ஹெரோயினுடன் சட்டத்தரணி கைது

கொழும்பு, நவ. 13

அநுராதபுரம் பிரதேசத்தில் ஹெரோயின் போதைப்பொருளுடன் சட்டத்தரணி ஒருவர் நேற்று முன் தினம் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாக அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரம் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் அநுராதபுரம் நீதிமன்றில் கடமையாற்றும் 42 வயதுடைய சட்டத்தரணி ஆவார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் போதைப்பொருளுக்கு அடிமையானவர் என பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேக நபரிடமிருந்து 02 கிராம் 300 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 528 நிலையங்களில் நாளை வாக்களிப்பு

## அம்பாறையில் அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி 07 ஆசனங்களுக்காக 640 வேட்பாளர்கள் போட்டி

கல்முனை, நவ.13

**நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் 528 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பு நடைபெற ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக அபேவிக்கிரம தெரிவித்தார்.**

அவர் மேலும் கூறுகையில், "அம்பாறை மாவட்டத்தில் பாராளுமன்றத் தேர்தலில் 528 வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பு நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

ஜனாதிபதித் தேர்தலில் 26 ஆயிரமாக இருந்த தபால் மூல வாக்குகள் இம்முறை முப்பதாயிரமாக அதிகரித்து இருக்கின்றது.


அதேபோன்று அம்பாறை ஹார்டி உயர் தொழில்நுட்ப கல்லூரியில் வாக்கெண்ணும் நிலையங்கள் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் 56 ஆக இருந்தது. ஆனால், பாராளுமன்றத் தேர்தலில் அது 68 ஆக அதிகரிக்கப்பட்டு இருக்கின்றன.

அம்பாறை மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட 21 அரசியல் கட்சிகளினதும் 43 சுயேச்சை குழுக்களினதும் நியமனப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

அம்பாறை மாவட்டத்தில் 2024 பாராளுமன்றத் தேர்தலுக்காக 5 இலட்சத்து 55432 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். பாராளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் 2024 ஆண்டுக்கான பொதுத் தேர்தல் தேர்தல்கள் ஆணைக் குழுவால் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதன் பிரகாரம் 2024. 10. 04 தொடக்கம் 2024.10.11 வரையான காலப்பகுதியில் திகாமடுல்ல தேர்தல் மாவட்டத்தில் 07 ஆசன தெரிவுக்காக அங்கீகரிக்கப்பட்ட 22 அரசியல் கட்சிகளும் 50 சுயேச்சைக்குழுக்களின் நியமனப் பத்திரங்களும் கிடைக்கப்பெற்றிருந்தன.

அத்துடன் நியமனப்பத்திரங்களை தாக்கல் செய்த அங்கீகரிக்கப்பட்ட ஒரு கட்சியும் 07 சுயேச்சைக்குழுக்களையும் தேர்தல் சட்ட திட்டங்களுக்கமைய பல்வேறு குறைபாடுகளை கருத்தில் கொண்டு நிராகரித்துள்ளோம்.

பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் அம்பாறை மாவட்டத்தில் வன்முறையற்றதும் அமைதியானதுமான தேர்தல் செயல்பாடுகள் நடைபெற்றுகொண்டு வருகின்றன. பெரியளவிலான வன்முறைகள் எவையும் இதுவரை இடம்பெறவில்லை. எனினும், சிறு சம்பவங்கள் தேர்தல் கண்காணிப்பாளர்கள் ஊடாக கிடைக்கப்பெற்றிருந்தன. அவற்றுக்கான தீர்வுகள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன. வன்முறையற்ற நீதியான தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவும் தெரிவத்தாட்சி அலுவலருமான நானும் பொதுமக்களின் ஒத்துழைப்பை எதிர்பார்க்கின்றோம்" - என்றார். (எ)






## மருதமுனை அல்மனாரில் மாணவர்கள் விடுகை விழா

மருதமுனை, நவ. 13

மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரியின் 45 ஆவது வருடாந்த உயர்தரப் பிரிவு மாணவர்களின் விடுகை விழா திங்கட்கிழமை நடைபெற்றது.

கல்லூரி அதிபர் ஐ. உபைதுல்லாஹ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கல்முனை மாநகர ஆணையாளரும் கிழக்கு மாகாண சபையின் முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சிப் பிரிவு பணிப்பாளருமான என். எம். நௌபீஸ் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார். (எ)

## வருடாந்த இரத்ததான நிகழ்வு



மண்முனை, நவ. 13

மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் வருடாந்த இரத்ததான நிகழ்வு இவ் வருடம் 7ஆவது தடவையாக பிரதேச செயலகத்தில் சிறப்பாக நடத்தப்பட்டது.

களுவாஞ்சிகுடி ஆதார மருத்துவமனை மற்றும் மட்டக்களப்பு போதனா மருத்துவமனை இரத்த வங்கியுடன் இணைந்து ஏற்பாடு செய்த இரத்ததான நிகழ்வு திங்கட்கிழமை பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் நடைபெற்றது .

விளையாட்டு கழகங்கள், இளைஞர் கழகங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள், படையினர், பொதுமக்கள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என இருநூறுக்கும் அதிகமானோர் குருதிக் கொடை வழங்கினர். (எ)

## சங்கர்புரத்தில் சோயா அறுவடையும் புதிய தொழில்நுட்பங்கள் பற்றிய விழிப்பூட்டலும்

மட்டக்களப்பு, நவ. 13

மட்டக்களப்பு மாவட்ட விவசாய திணைக்களத்தின் ஏற்பாட்டில் போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சங்கர்புரத்தில் முன்மாதிரி துண்டமாக செய்கை பண்ணப்பட்ட சோயா மற்றும் சேதன மரக்கறிகளின் அறுவடையும் புதிய தொழில்நுட்பங்கள் தொடர்பான விழிப்பூட்டல் நிகழ்வும் நேற்று நடைபெற்றது.

றாணமடு விவசாய போதனாசிரியர் பிரிவுக்கு பொறுப்பான விவசாய போதனாசிரியர் திருமதி துஷ்யந்தி ஜதீஸன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராக தெற்கு வலய உதவி விவசாய பணிப்பாளர் திருமதி சுகன்யா திருமதி நித்தியா நவரூபன், விவசாய போதனாசிரியர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



சங்கர்புரத்தில் முன்னோடி விவசாயியான வைரமுத்துவுக்கு விவசாய திணைக்களத்தால் சோயாவில் 3 வகையான இனங்கள் வழங்கப்பட்டன.

முன்மாதிரி துண்டமாக அதனை சிறப்பாக செய்கை பண்ணி அதன் அறுவடையும் சேதன வீட்டுத்தோட்டத்தில் செய்கை பண்ணிய கத்தரி, புடோல், அவரை போன்றவற்றின் அறுவடையோடு சூரிய ஒளியில் இயங்கக்கூடிய சோலார் யானை வேலி பயன்படுத்தும் முறை புடோலுக்கு ஏற்படுத்தும் பழ ஈயை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து விவசாய போதனாசிரியர்களால் செய்து காட்டப்பட்டன. (எ)

## கல்முனை கார்மேல் பற்றிமாவில் களைகட்டிய மீலாதுன் நபி விழா

கல்முனை, நவ. 13

கிழக்கில் புகழ்பூத்த கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய கல்லூரியின் வருடாந்த மீலாதுன் நபி விழா கல்லூரி அதிபர் எஸ். ஈ. றெஜினோல்ட் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

கல்லூரியின் 125ஆவது ஆண்டினை சிறப்பிக்கும் வகையில் மீலாதுன் நபி விழாவானது பிரமாண்டமாக நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராக தென்கிழக்கு பல்கலைக்கழக [illegible] தலைவர் பேராசிரியர் எம். எம். பாசில் கலந்து சிறப்பித்தார். (எ)



## சேவை நலன் பாராட்டு விழா

கல்முனை, நவ. 13

கல்முனை பொது நூலகத்தில் 30 ஆண்டுகள் நூலக உதவியாளராக கடமையாற்றி ஓய்வு பெற்றுச் செல்கின்ற திருமதி தங்கேஸ்வரி சுகிர்தனுக்கு நூலக ஊழியர்கள் ஒழுங்கு செய்திருந்த சேவை நலன் பாராட்டு விழா நேற்று செவ்வாய்கிழமை நூலக மண்டபத்தில் நடைபெற்றது. (எ)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேலுக்கு எதிராக ஹிஸ்புல்லா தாக்குதல்

## மத்திய கிழக்கில் மீண்டும் போர்ப் பதற்றம்





ஜெருசலேம், நவ. 13

**இஸ்ரேலுக்கு எதிராக ஹிஸ்புல்லா அமைப்பினர் நேற்று அதிகாலை முதல் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருவதால் போர்ப் பதற்றம் அதிகரித்துள்ளது.**

காஸாவிலுள்ள ஹமாஸ் அமைப்பினருக்கு எதிராக ஓராண்டுக்கும் மேலாக இஸ்ரேல் போர் தொடுத்து வரும் நிலையில், லெபனானை சேர்ந்த ஹிஸ்புல்லா அமைப்பினர் இஸ்ரேல் மீது தீவிரத் தாக்குதல் நடத்தி வருகின்றனர். எனவே, ஹிஸ்புல்லா அமைப்பினருக்கு எதிராக லெபனானிலும் இஸ்ரேல் குண்டுமழை பொழிந்து வருகிறது. இவ்வாறு ஒரே நேரத்தில் ஹமாஸ் மற்றும் ஹிஸ்புல்லா அமைப்புகளுக்கு எதிராக இஸ்ரேல் போரிட்டு வருகிறது.

முன்னதாக ஹிஸ்புல்லாக்களுக்கு எதிராக புதுவிதமான தாக்குதல் ஒன்று கடந்த செப்ரெம்பர் மாதம் நடந்தது. அவர்கள் பயன்படுத்தி வந்த பேஜர்கள் மற்றும் வாக்கி - ரோக்கிகளை வெடிக்க வைத்து பெரும் தாக்குதல் அரங்கேற்றப்பட்டது.

இதன் பின்னணியில் இஸ்ரேல் இருக்கக்கூடும் என்ற குற்றச்சாட்டுகளும் எழுந்தன. இந்த நிலையில், இந்தத் தாக்குதலை நிகழ்த்தியது தாங்கள்தான் என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு வெளிப்படையாக ஒப்புக்கொண்டார்.

நெதன்யாகுவின் இந்த ஒப்புதல் பேச்சு, ஹிஸ்புல்லா அமைப்பினருக்கு கடும் கோபத்தை ஏற்படுத்தியுள்ளது. இத்தகைய சூழலில் நேற்று அதிகாலை இஸ்ரேல் மீது தொடர்ச்சியாக 165 ஏவுகணைகளை ஏவி ஹிஸ்புல்லா அமைப்பினர் தாக்குதல் நடத்தியுள்ளனர். இந்த ஏவுகணைகள் வடக்கு இஸ்ரேலின் ஹைபாவைத் தாக்கியதாக கூறப்படுகிறது. இந்த சம்பவத்தில் ஒரு குழந்தை உட்பட 7 பேர் காயமடைந்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

இஸ்ரேலைத் தாக்கிய மிகக் கொடிய தாக்குதல்களில் ஒன்றாக ஹிஸ்புல்லாவின் இந்தத் தாக்குதல்கள் இருந்ததாக கூறப்படுகிறது. (எ)



# பலஸ்தீன மக்களின்மீது காஸாவில் சித்திரவதை

## ஹமாஸ் போராளிகளை தொடர்புபடுத்தி வீடியோ வெளியிட்ட இஸ்ரேல் இராணுவம்

ஜெருசலேம், நவ. 13

பலஸ்தீன மக்களை ஹமாஸ் போராளிகள் குழுவினர் சங்கிலியால் கட்டிவைத்து சித்திரவதை செய்யும் வீடியோவை இஸ்ரேல் இராணுவம் வெளியிட்டுள்ளது. பலஸ்தீன மக்கள் சங்கிலியால் பிணைக்கப்பட்டு அவர்கள் அடித்து துன்புறுத்தப்படுவது வீடியோவில் பதிவாகியுள்ளது.

இந்த வீடியோ 2018 முதல் 2020ஆம் ஆண்டுக்குள் வடக்கு காஸா பகுதியில் எடுக்கப்பட்டிருக்கலாம் என்று தெரிகிறது. கண்காணிப்புக் கமராவில் பதிவான வீடியோ காட்சிகள் இவை என்று தெரிவதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது. இது தொடர்பான தகவலை நியூயோர்க் போஸ்ட் இதழ் வெளியிட்டுள்ளது.

47 நிமிடங்கள் ஓடும் இந்த வீடியோவில் முகாமின் கூரைப் பகுதியில் இருந்து சங்கிலியால் பொதுமக்கள் கை, கால்கள் கட்டப்பட்டு தலைகீழாக தொங்கவிடப்பட்டு சித்திரவதை செய்யப்படுகின்றனர். மேலும் ஹமாஸ் அமைப்பினர் தங்களது முகங்களை முகமூடியால் மூடிக்கொண்டு அவர்களிடம் கேள்வி எழுப்புவதும், அடித்து துன்புறுத்துவதும் பதிவாகியுள்ளது. (எ)



# உக்ரைன்மீது ரஷ்யா ட்ரோன் தாக்குதல்

## 6 பேர் உயிரிழந்தனர்

கீவ், நவ. 13

உக்ரைன் - ரஷ்யா இடையேயான போர் இன்று 991ஆவது நாளாக நீடித்து வருகிறது. இந்தப் போரில் இதுவரை ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர்.

உக்ரைனுக்கு ஆயுத உதவிகளை அமெரிக்கா உட்பட மேற்கத்திய நாடுகள் வழங்கி வருகின்றன. போரை நிறுத்த பல்வேறு நாடுகள் முயற்சித்து வருகின்றன. ஆனால், இரு நாடுகளும் அமைதி பேச்சுகளுக்கு முன்வராததால் போர் தொடர்ந்து நீடித்து வருகிறது.

இந்த நிலையில், உக்ரைனின் மைகொவ்யா மற்றும் சபோரிஜியா ஆகிய தெற்கு நகரங்கள் மீது ரஷ்யா நேற்று முன்தினம் இரவு ட்ரோன் தாக்குதல் நடத்தியது. இந்தத் தாக்குதலில் 6 பேர் உயிரிழந்தனர். மேலும், 23 பேர் படுகாயமடைந்தனர். (எ)

# இராணுவம் - பயங்கரவாதிகள் நேரடி மோதலில் 113 பேர் பலி!



நிஜாமேனா, நவ. 13

சாட் நாட்டில் இராணுவம், பயங்கரவாதிகள் இடையே நடந்த மோதலில் 113 பேர் உயிரிழந்தனர்.

வடக்கு - மத்திய ஆபிரிக்காவில் சாட் குடியரசு என்ற நாடு உள்ளது. இந்த நாட்டை சுற்றி லிபியா, சூடான் மற்றும் நைஜீரியா ஆகிய நாடுகள் அமைந்துள்ளன.

இங்கு போகோஹராம், ஐ. எஸ். ஐ. எஸ். போன்ற பயங்கரவாத அமைப்புகள் செயல்பட்டு வருகின்றன. பயங்கரவாதிகளை ஒடுக்கும் நடவடிக்கையில் படையினர் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் படையினருக்கும் பயங்கரவாத குழுக்களுக்கும் இடையே அவ்வப்போது மோதல் சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில், சாட் நாட்டின் லேக் சாட் பகுதியில் இராணுவ சோதனைச்சாவடி மீது போகோஹராம் பயங்கரவாதிகள் நேற்று முன்தினம் மாலை திடீர் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலுக்கு இராணுவமும் பதிலடி கொடுத்தது.

இரு தரப்புக்கும் இடையே நடந்த மோதலில் 17 இராணுவத்தினர், 96 பயங்கரவாதிகள் என மொத்தம் 113 பேர் உயிரிழந்தனர். (எ)

# இஸ்ரேல் தாக்குதலில் 24 பேர் உயிரிழப்பு!

பெய்ரூட், நவ. 13

லெபனானின் தெற்கு மற்றும் கிழக்கு பகுதியில் இஸ்ரேல் மீண்டும் வான்வழித் தாக்குதலில் ஈடுபட்டது.

இதில், பால்பெக் மற்றும் பெகா பள்ளத்தாக்கு பகுதியிலுள்ள நகரங்கள் மற்றும் கிராமங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. பெய்ரூட் நகரின் வடக்கே பெயில் மாவட்டத்துக்கு உட்பட்ட ஆல்மேட் நகரம் மீதும் தாக்குதல் நடந்தது. இந்த தாக்குதல் சம்பவத்தில் 24 பேர் உயிரிழந்தனர். (எ)

# புடினுடன் ட்ரம்ப் பேசினாரா? ரஷ்யா திட்டவட்டமாக மறுப்பு

புதுடில்லி, நவ. 13

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுடன் அமெரிக்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட டொனால்ட் ட்ரம்ப் தொலைபேசியில் பேசியதாக தகவல் வெளியானது. ஆனால், இந்தச் செய்திகளை ரஷ்ய ஜனாதிபதி மாளிகை திட்டவட்டமாக மறுத்துள்ளது. "இது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது" என்றும் கண்டித்துள்ளது.

ஜனாதிபதி மாளிகை செய்தித்தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் கூறுகையில், "இது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது. இது கற்பனையான ஒன்று. இந்த தகவல் தவறானது. டொனால்ட் ட்ரம்பை தொடர்புகொள்வதற்கான உடனடித் திட்டங்கள் எதுவும் எங்கள் ஜனாதிபதி புடினுக்கு இல்லை" என்றும் அவர் விளக்கமளித்துள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குர்பாஸ் அதிரடி சதம்

# கடைசி போட்டியில் அபார வெற்றி; ஒருநாள் தொடர் ஆப்கான் வசம்



ஷார்ஜா, நவ. 13

ஒருநாள் தொடரின் கடைசி போட்டியில் 5 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற ஆப்கானிஸ்தான் அணி தொடரையும் சுவீகரித்தது.

ஆப்கானிஸ்தான் - பங்களாதேஷ் இடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் ஷார்ஜாவில் நடைபெற்றது. இதில் முதல் போட்டியில் ஆப்கானிஸ்தானும், 2ஆவது போட்டியில் பங்களாதேஷும் வெற்றி பெற்றிருந்தன.


இந்த நிலையில், தொடர் யாருக்கு என்பதை தீர்மானிக்கும் 3ஆவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி ஷார்ஜாவில் நடைபெற்றது. இதில் நாணயச்சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. இதன்படி அந்த அணி 50 ஓவர்களில் 8 விக்கெட்களை இழந்து 244 ஓட்டங்கள் சேர்த்தது. அதிகபட்சமாக மஹ்மதுல்லா 98 ஓட்டங்களும், மெஹதி ஹசன் மிராஸ் 66 ஓட்டங்களும் அடித்தனர். ஆப்கானிஸ்தான் தரப்பில் அஸ்மத்துல்லா ஓமர்சாய் 4 விக்கெட்கள் வீழ்த்தினார்.

இதையடுத்து 245 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி ஆப்கானிஸ்தான் களமிறங்கியது. குர்பாஸ் நிலைத்து விளையாட மறுமுனையில் செடிகுல்லா அடல் (14 ), ரஹ்மத் ஷா (8 ) மற்றும் அணித் தலைவர் ஹஷ்மத்துல்லா ஷாகிடி (6 ) ஆகியோர் அடுத்தடுத்து ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர். இந்த நெருக்கடிக்கு மத்தியில் குர்பாஸுடன் கை கோர்த்த அஸ்மத்துல்லா ஓமர்சாய் சிறப்பாக விளையாட இருவரும் அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்து சென்றனர்.

குர்பாஸ் சதம் அடித்து அசத்தினார். ஓமர்சாய் அரைச்சதம் அடித்தார். குர்பாஸ் 101 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். பின்னர் களமிறங்கிய முகமது நபி அதிரடியாக விளையாட ஆப்கானிஸ்தான் 48. 2 ஓவர்களில் 5 விக்கெட்களை இழந்து 246 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை ஆப்கானிஸ்தான் 2 - 1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

ஓமர்சாய் ஆட்ட நாயகனாகவும், முகமது நபி தொடர் நாயகனாகவும் தெரிவு செய்யப்பட்டனர். (எ)

# சி. எஸ். கே. கைவிடாது தீபக் சஹர் நம்பிக்கை



சென்னை, நவ. 13

சி. எஸ். கே. நிர்வாகம் என்னை ஏலத்தில் எடுக்கும் என்று நம்புகிறேன்- இவ்வாறு வேகப்பந்து வீச்சாளர் தீபக் சஹர் தெரிவித்தார்.

18ஆவது ஐ. பி. எல். கிரிக்கெட் போட்டிக்கான வீரர்களின் மெகா ஏலம் நவம்பர் மாதம் இறுதியில் நடக்கவுள்ளது. இதற்கு முன்பாக தக்கவைக்கும் வீரர்களின் பட்டியலை அணிகள் ஐ. பி. எல். நிர்வாகத்திடம் சமர்ப்பித்தன. ஒரு அணி அதிகபட்சமாக 6 வீரர்கள் வரை தக்கவைக்க அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இதன்படி ஐ. பி. எல்லில் பங்கேற்கும் 10 அணிகளும் தாங்கள் தக்கவைத்துள்ள வீரர்களின் விவரங்களை அறிவித்துவிட்டன. அதில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி (சி. எஸ். கே.) 5 வீரர்களை தக்கவைத்துள்ளது. எம். எஸ். டோனி, ருதுராஜ் கெய்க்வாட், ரவீந்திர ஜடேஜா, ஷிவம் துபே மற்றும் மதீச பத்திரண ஆகிய 5 வீரர்களை தக்கவைத்துள்ளது. சென்னை அணியின் முக்கிய வேகப்பந்து வீச்சாளர் தீபக் சஹர் அணியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், சி. எஸ். கே. நிர்வாகம் என்னை ஏலத்தில் எடுக்கும் என நம்புகிறேன் என்று தீபக் சஹர் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில்,

“கடைசியாக நடைபெற்ற மெகா ஏலத்தில் என்னை அவர்கள் தக்க வைக்கவில்லை. ஆனால், எனக்காக பல முயற்சிகளை மேற்கொண்டு மீண்டும் சென்னை அணிக்குள் கொண்டு வந்தனர். இந்த வருடம் என்ன நடக்கப் போகிறது என்பது தெரியவில்லை. ஆனால், என் திறமைக்கு இப்போது அதிக மதிப்பு கிடைக்கும் என்று எனக்குத் தெரியும்”- என்றார். (எ)

# லக்னோ அணியிலிருந்து கே. எல். ராகுல் விலகல்




மும்பை, நவ. 13

லக்னோ அணியிலிருந்து அதன் தலைவர் கே. எல். ராகுல் விலகியுள்ளார்.

கடந்த ஐ. பி. எல். தொடரின்போது லக்னோ அணியின் தலைவர் கே. எல். ராகுலை அந்த அணியின் உரிமையாளர் சஞ்சீவ் கோயங்கா மைதானத்தில் இரசிகர்கள் முன்னிலையில் திட்டியது சர்ச்சையை ஏற்படுத்தியது. இதனால் லக்னோ அணியிலிருந்து ராகுல் விலகியுள்ளார்.

இந்த நிலையில் ஐ. பி. எல். தொடரில் அணித் தலைவராக பணியாற்றாமல் சாதாரண வீரராக சுதந்திரத்துடன் விளையாடுவதற்காகவே லக்னோ அணியிலிருந்து வெளியேறியதாக ராகுல் கூறியுள்ளார். அவர் மேலும் கூறுகையில்,

“இந்திய ரி - 20 அணியில் நான் நீண்ட காலமாக இல்லை. ஒரு வீரராக நான் தற்போது எங்கே இருக்கிறேன் என்பது எனக்குத் தெரியும். மீண்டும் இந்திய அணிக்கு திரும்புவதற்கு நான் என்ன செய்ய வேண்டும் என்பதும் எனக்கு தெரியும். எனவே, இந்த ஐ. பி. எல். தொடரில் என்னுடைய கிரிக்கெட்டை மிகவும் மகிழ்ச்சியுடன் விளையாடுவதற்காக ஆவலுடன் உள்ளேன். இந்திய ரி - 20 அணியில் மீண்டும் இடம்பெற வேண்டும் என்பதே என்னுடைய முதன்மை இலக்காகும்”- என்றார். (எ)

# இலங்கை - நியூசிலாந்து ஒருநாள் போட்டி இன்று

கொழும்பு, நவ. 13

இலங்கை - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடர் இன்று 13ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

நியூசிலாந்து கிரிக்கெட் அணி இலங்கையில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட ரி - 20 மற்றும் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர்களில் விளையாடி வருகிறது.

இதில் முதலில் நடைபெற்ற ரி - 20 தொடர் 1 - 1 என்ற கணக்கில் சமனில் முடிவடைந்தது.

இதனையடுத்து இவ்விரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது ஒருநாள் போட்டி வரும் இன்று தொடங்கவுள்ளது.

இந்த நிலையில் நியூசிலாந்து அணியிலிருந்து முன்னணி வேகப்பந்து வீச்சாளரான பெர்குசன் விலகியுள்ளார்.(எ)

# இந்தியர்களை எதிர்கொள்ள காத்திருக்கும் ஆஸி. வீரர்




மெல்பேர்ண், நவ. 13

இந்திய பந்துவீச்சாளர்களை எதிர்கொள்ள காத்திருக்கிறேன் என்று அவுஸ்திரேலிய இளம் வீரர் நாதன் மெக்ஸ்வீனி தெரிவித்தார்.

இந்திய கிரிக்கெட் அணி, அவுஸ்திரேலியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு பார்டர் - கவாஸ்கர் (5 போட்டிகள் கொண்ட டெஸ்ட்) தொடரில் விளையாடுகிறது. முதலாவது டெஸ்ட் போட்டி பெர்த்தில் எதிர்வரும் 22ஆம் திகதி தொடங்குகிறது. இந்தத் தொடருக்காக இரு அணி வீரர்களும் தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நடிகர் ஷாருக்கானை பாராட்டிய கம்மின்ஸ்

சிட்னி, நவ. 13

முதல் முறையாக ஷாருக்கானை பார்த்தபோது அவர் யார் என்று எனக்கு தெரியவில்லை. ஓர் ஐ. பி. எல். அணிக்கு ஷாருக்கான் போன்றவர் உரிமையாளராக இருப்பது சிறந்த விடயம் என்று அவுஸ்திரேலிய அணியின் தலைவர் பட் கம்மின்ஸ் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,“2014ஆம் ஆண்டு முதல் முறையாக ஷாருக்கானை பார்த்தபோது அவர் யார் என்று எனக்கு தெரியவில்லை. 18 - 19 வயதில் இருந்த நான் இந்தியப் படங்களை பார்த்ததில்லை. அப்போது ஷாருக்கானை திரை உலக நட்சத்திரம் என்று என்னிடம் சொன்னார்கள். அவரைச் சுற்றி பாதுகாவலர்கள் இருந்தார்கள். மற்ற இளம் இந்திய வீரர்கள் அவரிடம் பேசுவதற்கு தயங்கினார்கள். அதனால் அவர் சிறப்பானவராக இருப்பார் என்று நான் நினைத்தேன்.

ஓர் அணியின் தலைவராக ஷாருக்கானை விட சிறந்த உரிமையாளரை நீங்கள் எதிர்பார்க்க முடியாது. ஏனெனில் அவர் வீரர்களான எங்களை மிகவும் மகிழ்ச்சியுடன் சுதந்திரமாக விளையாடுங்கள் என்றே சொல்வார். ஆனால், மற்ற ஐ. பி. எல். அணியின் உரிமையாளர்கள் தங்களுக்கு தாங்களே அழுத்தத்தை போடுவார்கள். ஆனால் ஷாருக்கான் அணி மற்றும் வீரர்களிடமிருந்து அழுத்தத்தை எடுக்க முயற்சிப்பது சிறந்த விடயமாகும்” என்று கம்மின்ஸ் கூறினார்.

இந்தியாவில் நடைபெறும் ஐ. பி. எல். கிரிக்கெட் போட்டிகளில் விளையாடும் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் உரிமையாளராக நடிகர் ஷாருக்கான் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

## பிள்ளையான்...

ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் பிரிட்டனின் சனல் - 4 தொலைக்காட்சி வெளியிட்ட ஆவணப்படம் தொடர்பில் குற்றப்புலனாய்வு பிரிவு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

அந்த ஆவணப்படத்தில் பிள்ளையான் என்று அறியப்பட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தனின் முன்னாள் தனிப்பட்ட செயலாளரான மௌலானா சாட்சியம் அளித்திருந்தார். அது தொடர்பில் விசாரிப்பதற்காக நேற்று செவ்வாய்க்கிழமை பிள்ளையானை சி. ஐ. டியின் தலைமை பணிமனைக்கு வருமாறு உத்தரவிட்டிருந்தது.

இந்த நிலையிலேயே பிள்ளையான் சி. ஐ. டி. தலைமை பணிமனைக்கு நேற்றையதினம் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருந்தார்.

அதில், "குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு இன்றைய தினம் (நேற்று) வருகை தரமுடியாது. 18 முதல் 25ஆம் திகதிக்குள் ஒரு நாளை ஒதுக்கினால் தான் சமுகமளிக்க முடியும்", என்று குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## பிரான்ஸ்...

இவர் நாளைய தினம் நடைபெறவுள்ள பாராளுமன்றத் தேர்தலில் சுயேச்சைக் குழு ஒன்றின் சார்பில் போட்டியிடுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-5)

## ஆனையிறவு...

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் 1952ஆம் ஆண்டு தொடக்கம் இந்தப் பகுதியில் இராணுவ முகாம் அமைக்கப்பட்டு சோதனை சாவடியும் இயங்கி வந்தது.

வரலாற்றுக் காலம் தொட்டு போர் மற்றும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஆனையிறவை 2000ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு கைப்பற்றியது. இதைத் தொடர்ந்து அங்கிருந்த இராணுவ முகாமும் சோதனைச் சாவடியும் அகற்றப்பட்டன.

இறுதிப் போர் நடவடிக்கையின் போது ஆனையிறவை 2008ஆம் ஆண்டு இராணுவம் மீளக் கைப்பற்றியது. இதன் பின்னர் கடந்த 17 வருடங்களாக இயங்கி வந்த சோதனைச் சாவடியே தற்போது அகற்றப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அமைதியான...

தேர்தல் ஆணைக்குழுவின் இணையத்தளம் அல்லது தமக்குரிய தபால் நிலையத்தில் அவற்றைப் பெற முடியும். வாக்களிப்பதற்கு வாக்காளர் அட்டை கட்டாயம் இல்லை. தேர்தல் ஆணைக்குழுவால் வெளியிடப்பட்டுள்ள உறுதிப்படுத்தும் அடையாள அட்டைகள் மூலம் வாக்களிக்க முடியும்.

தேசிய அடையாள அட்டை, செல்லுபடியாகும் கடவுச்சீட்டு, சாரதி அனுமதிப்பத்திரம், அரச சேவையில் ஓய்வு பெற்றவர்களுக்காக வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டை, முதியோர் அடையாள அட்டை, பதிவாளர் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ள மத குருமார்களுக்கான அடையாள அட்டை, பதிவாளர் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ள புகைப்படத்துடான கடிதம், விசேட தேவையுடையோருக்காக தேர்தல்கள் ஆணைக்குழுவால் வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டை ஆகியவற்றை பயன்படுத்தி வாக்களிக்க முடியும். இதற்கு அப்பாலான எந்தவோர் அடையாள அட்டையும் செல்லுபடியாகாது.

வாக்குச் சாவடியில் புகைப்படம் எடுத்தல், காணொலி எடுத்தல், தொலைபேசிகளை பயன்படுத்துதல், போதைப் பொருள் பாவனையுடன் வாக்களிக்க வருகை தரல், ஆயுதங்களை வைத்திருத்தல் என்பன தடை செய்யப்பட்டுள்ளது.

வாக்குச் சாவடிக்கு உட்பட்ட 500 மீற்றர் பகுதியில் வாக்குகளை கோருவது, குறிப்பிட்ட தரப்புக்கு வாக்களிக்க வேண்டாம் எனக் கோருவது, துண்டு பிரசுரங்களை வழங்கல், சின்னங்களை காட்சிப்படுத்தல், சின்னங்கள் பிரச்சாரம் செய்தல் உட்பட எந்தவொரு பிரசார நடவடிக்கையிலும் ஈடுபட முடியாது. இதேபோன்று அமைதிக்காலத்திலும் எவரும் பரப்புரைகளில் ஈடுபடமுடியாது.

நடைபெறவுள்ள தேர்தலில் இரு வகையான வாக்குச்சீட்டுகள் வழங்கப்படவுள்ளன. பொலநறுவை, மொனராகலை, கேகாலை மாவட்டங்களுக்கு ஒரே நிரலிலான வாக்கு சீட்டுகளும் ஏனைய 19 தேர்தல் மாவட்டங்களுக்கும் இரு நிரல்களை கொண்ட வாக்கு சீட்டுகளும் வழங்கப்படும்.

வாக்காளர் ஒருவர் தாம் விரும்பும் கட்சி அல்லது சுயேச்சை குழுவுக்கு வாக்களிக்க முடியும். இதன் பின்னர் விரும்பினால், 3 வேட்பாளர்களுக்கு விருப்பு வாக்குகளையும் அளிக்க முடியும்.

திங்கட்கிழமை நள்ளிரவு முதல் அமைதிக் காலம் நடைமுறையில் இருக்கிறது. இதனால், ஊடகங்கள், சமூகஊடகங்களில் பிரசாரங்களை முன்னெடுக்கவோ அல்லது விளம்பரங்களை வெளியிடவோ முடியாது. அத்துடன், தமக்கு வாக்களிக்குமாறு கோரி குறுஞ்செய்திகளையோ அல்லது தொலைபேசி அழைப்புகளையோ மேற்கொள்ளவும் முடியாது.

வாக்குச்சீட்டில் வாக்காளர்கள் புள்ளடியை மாத்திரமே இடுதல் வேண்டும்.

தேர்தலில் வாக்களிப்பதற்கு அரச, மற்றும் தனியார் ஊழியர்களுக்கு குறைந்தபட்சம் 4 மணித்தியாலங்கள் விடுமுறை வழங்க வேண்டும். வாக்காளர் ஒருவர் 40 கி.மீ. க்கு உட்படவராக இருந்தால் அரை நாள் விடுமுறையும், 40 முதல் 100 கி.மீ. க்கு உட்பட்டவராக இருந்தால் ஒருநாள் விடுமுறையும், 100 முதல் 150 கி.மீ. வரை இருந்தால் ஒன்றரை நாள் விடுமுறையும், 150 கி.மீ. க்கு மேல் இருந்தால் தூரத்தின் பிரகாரம் இரண்டு அல்லது மூன்று நாட்கள் விடுமுறையும் வழங்கப்பட வேண்டும்.

தபால் வாக்குகள் எண்ணும் பணி பிற்பகல் 4. 15 மணிக்கும் பிரதான வாக்குகள் எண்ணும் பணிகள் இரவு 7 .15 மணிக்கு பின்னரும் ஆரம்பிக்கப்படும். நள்ளிரவுக்கு முன்னர் முதல் பெறுபேற்றை வெளியிட முடியும் என எதிர்பார்க்கிறோம்.

வாக்களித்த பின்னர் பொது மக்களை வீட்டில் இருக்குமாறு கோருகிறோம். வாக்களித்த பின்னர் வாக்குச் சாவடிகள் மற்றும் வீதிகளில் கூடியிருக்க வேண்டாம். வீதியில் ஒன்றுகூடி தேவையற்ற பிரச்னைகள் ஏற்பட்டால் சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும். சட்டத்தை கடுமையாக அமுல்படுத்த பொலிஸார், அதிரடிப் படையினர் மற்றும் முப்படையினருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

மக்களின் வாக்குகளை உரிய வகையில் எண்ணி பெறுபேறுகளை வெளியிடும் முழுமையான பொறுப்பை தேர்தல்கள் ஆணைக்குழு ஏற்கிறது. வாய்மூல தகவல்களை நம்ப வேண்டாம். ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ தகவல்களை நம்புமாறு கோருகிறோம்.

மூன்று கட்டங்களாக வாக்கு எண்ணும் பணிகள் நடைபெறும். தொகுதியில் அளிக்கப்பட்ட வாக்குகள் முதலில் எண்ணப்படும். இரண்டாம் கட்டமாக கட்சிகள் பெற்ற வாக்குகள் எண்ணப்பட்டு ஆசனங்கள் ஒதுக்கப்படும். மூன்றாம் கட்டமாக கட்சிகளில் வேட்பாளர்கள் பெற்ற விருப்பு வாக்குகள் எண்ணப்படும்.

நாளை வியாழக்கிழமை காலை 7 மணிமுதல் பிற்பகல் 4 மணி வரை வாக்களிப்பு நடைபெறும். உரிய நேரத்தில் அனைவரும் வாக்களிப்பு நிலையங்களுக்கு சென்று வாக்களித்து தமது ஜனநாயக கடமையை நிறைவேற்றுமாறு கோருகிறோம்." - என்றார். (ஐ)

## விடத்தல்..

இந்த வழக்கு விசாரணை நேற்றைய தினம் உயர் நீதிமன்ற நீதியரசர்கள் எஸ். துரைராஜா, ஏ. எச்.எம்.டி. நவாஸ், ஜனக் டி சில்வா ஆகியோரின் அமர்வு விசாரித்தது. இதன்போதே இந்த வர்த்தமானி அறிவிப்பு மீதான தடையை எதிர்வரும் ஜூலை 29ஆம் திகதி வரை நீடித்து உத்தரவிடப்பட்டது. (ஐ)

## தேர்தலுக்கான...

அவர் மேலும் தெரிவிக்கையில், நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 4 இலட்சத்து 92 ஆயிரத்து 280 பேரும் கிளிநொச்சியில் ஒரு இலட்சத்து 907 பேரும் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர் .

வாக்காளர்கள் வாக்களிக்க செல்வதற்கான விசேட போக்குவரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக தீவுப் பகுதிகளுக்கு செல்வதற்கு குறிகாட்டுவான் பகுதியில் இருந்து விசேட படகு சேவைகள் நடைபெறும்.

யாழ்ப்பாணத்தில் ஒரு வன்முறை சம்பவமும் 62 சட்ட மீறல்களும் பதிவாகியுள்ளன. அது தொடர்பிலான தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மக்கள் நாளை வியாழக்கிழமை காலை 7 மணியில் இருந்து மாலை 4 வரையில் வாக்களிக்க முடியும். வாக்கெண்ணும் நடவடிக்கைகள் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும்.

அமைதியான முறையில் தேர்தலை நடத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளோம் என்றும் அவர் கூறினார். (ஐ)

## 12வாக்களிப்பு...

நாரந்தனை தெற்கு பொது நோக்கு மண்டப வாக்களிப்பு நிலையம் நாரந்தனை தெற்கு கிராம சக்தி பொது மண்டபத்துக்கும் மாற்றப்பட்டுள்ளன.

வட்டுக்கோட்டை தேர்தல் தொகுதியில் வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தியாலய மண்டப இல. 1 வாக்களிப்பு நிலையம் வடலியடைப்பு சனசமூக நிலையத்துக்கும் அராலி வடக்கு அமெரிக்க மிஷன் பாடசாலை வாக்களிப்பு நிலையம் அராலி இந்து கல்லூரிக்கும் மாற்றப்பட்டுள்ளன.

காங்கேசன்துறை தேர்தல் தொகுதியில் வயாவிளான் மத்திய கல்லூரி மண்டப இல. 2 வாக்களிப்பு நிலையம் பலாலி வடக்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்கு மாற்றப்பட்டுள்ளது.

மானிப்பாய் தொகுதியில் தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை மண்டப இல. 1 வாக்களிப்பு நிலையம் தாவடி தெற்கு சனசமூக நிலையத்துக்கு மாற்றப்பட்டுள்ளது

கோப்பாய் தொகுதியில் அச்சுவேலி மத்திய கல்லூரி மண்டப இல. 2 வாக்களிப்பு நிலையம், அச்சுவேலி ஆரம்ப பாடசாலைக்கும், அச்சுவேலி விக்னேஸ்வரா சனசமூக நிலைய வாக்களிப்பு நிலையம் விக்னேஸ்வரா முன்பள்ளிக்கும் மாற்றப்பட்டுள்ளன.

உடுப்பிட்டி தொகுதியில் இமையாணன் மாந்தோட்ட சிவஞான வைரவர் ஆலய மண்டப வாக்களிப்பு நிலையம் உடுப்பிட்டி பலநோக்கு கூட்டுறவு சங்கத்துக்கும் கரணவாய் சக்கலாவத்தை பொது நோக்கு மண்டபத்தில் இயங்கிய வாக்களிப்பு நிலையம் கொற்றாவத்தை செட்டித்தறை சித்தி விநாயகர் ஆலய கல்யாண மண்டபத்துக்கும் மாற்றப்பட்டுள்ளன.

நல்லூர் தொகுதியில் கொக்குவில் மேற்கு கிறிஸ்தவாலய தமிழ் கலவன் பாடசாலை மண்டப இல. 1 இல் இயங்கிய வாக்களிப்பு நிலையம் வீரமா பிடாரி அம்பாள் ஆலய மண்டபத்துக்கும் நாவலர் கலாசார மண்டபத்தில் இயங்கிய வாக்களிப்பு நிலையம் அத்தியடி ... கலாசார மண்டபத்துக்கும் மாற்றப்பட்டுள்ளன. (ஐ-05)

## அரசியல்வாதி...

வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைவர் கோஷல விக்ரமசிங்க தெரிவித்தார்.

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் செவ்வாய்க்கிழமை நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்துக்குள் அரசியல் வாதிகளின் தலையீட்டினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் ஊழல் மோசடிகள் தொடர்பில் முறைப்பாடு செய்வதற்கு எனது தனிப்பட்ட தொலைபேசி இலக்கம் ஒன்றை வழங்கியிருந்தேன். அதன் பிரகாரம் எமக்கு கிடைத்த முறைப்பாடுகளுக்கமை உள்ளக கணக்காய்வு பிரிவுக்கு தகவல் வழங்கி இருக்கிறோம்.

இதன் பிரகாரம் அந்த முறைப்பாடுகளில் 15 முறைப்பாடுகள் தொர்பில் ஆரம்பக்கட்ட விசாரணைகளை ஆரம்பிக்கவுள்ளோம். அந்த விசாரணைகள் எந்த துறைகளுக்கானவை என்பது தொடர்பான தகவல்கள் எதிர்வரும் வாரங்களில் அறியத்தருவோம். பணியகத்தில் இடம்பெற்றுள்ள ஊழல் மோசடி தொடர்பில் கிடைக்கப்பெற்றுள்ள 15 முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணை மேற்கொள்ள உள்ளக கணக் காய்வு பிரிவு நடவடிக்கை எடுத்துள ளது.

அத்துடன் பணியகத்தில் கடந்த காலங்களில் இருந்த அரசியல்வாதிகள் தங்களின் உறவினர்களை பணியகத்தில் தங்கவைத்துக்கொண்டு நிதி மோசடியில் ஈடுபட்ட முறை தொடர்பாகவும் எமக்கு தகவல் கிடைத்திருக்கிறது. இது தொடர்பாக விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க இருக்கிறோம்.

பல்வேறு அரசியல் தலையீடுகள் காரணமாக கடந்த காலங்களில் பணியகத்தின் நற்பெயருக்கு களங்கம் ஏற்பட்டிருந்தது. அந்த நிலைமையிலிருந்து பணியகத்தை பாதுகாக்க எதிர்காலத்தில் அர்ப்பணிப்புடன் செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்க இருக்கிறேன் - என்றார். (ஐ)

## தனது...

முறைப்பாடு செய்துள்ளார்.

யாழ்ப்பாணம் உதவி தேர்தல் ஆணையாளரிடம் நேற்று செவ்வாய்க்கிழமை அந்தப் பெண் முறைப்பாட்டை பதிவு செய்துள்ளார்.

தனது விவரங்களை தனக்கு தெரியாமலேயே பெற்று வேட்பாளர் பட்டியலில் பெயரை குறிப்பிட்டுள்ளனர். இது தொடர்பில் தனக்கு எந்த விடயமும் தெரிய வராத நிலையில், ஒருவர் எனக்கு தொலைபேசி அழைப்பு எடுத்து தேர்தலில் போட்டியிடுகிறீர்களா என்று கேட்டபோதே வேட்பாளர் பட்டியலில் தனது பெயர் இருந்தமை தெரிய வந்ததாக அந்தப் பெண் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பில் யாழ். மாவட்ட தேர்தல் திணைக்களத்தில் உறுதிப்படுத்திய பின்னரே இந்த முறைப்பாட்டை செய்துள்ளதாகவும் முறைப்பாடளித்த பெண் தெரிவித்தார். (ஐ)

## மின்கட்டண...

முன்மொழிவுகளை மீள்திருத்தம் செய்து கடந்த 8ஆம் திகதி சமர்ப்பிக்க பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு கோரியிருந்தது.

புதிய முன்மொழிவை தயாரிக்கவும் கணக்கீடு திருத்தங்களுடன் சமர்ப்பிக்கவும் மேலதிகமாக இரண்டு வார அவகாசத்தை மின்சார சபை கோரியது. இதன்படி, அடுத்த வாரம் முன்மொழிவுகள் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படும் என்று தெரிய வருகிறது.

இதேவேளை, 30 வீதம் வரை மின் கட்டணத்தை குறைப்பதற்கு அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாக ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க கடந்த வாரம் குறிப்பிட்டிருந்தமையும் சுட்டிக்காட்டத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# தேர்தலின் பின் பெரமுனவின் பதவி நிலைகளில் மாற்றம்!

## நாமல் ராஜபக்ஷ திட்டம்

கொழும்பு, நவ. 13

பொதுத்தேர்தலின் பின்னர் பொதுஜன பெரமுனவின் பதவி நிலைகளில் மாற்றம் ஏற்படும் என பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதித் தேர்தலில் கட்சி என்ற ரீதியில் பல சவால்களை எதிர்கொண்டிருந்தோம். நல்லாட்சி அரசாங்கம் பெற்றுக் கொண்ட முறையற்ற கடன்கள் கோட்டாபய தலைமையிலான அரசாங்கத்துக்கு பொறுப்பானது.

அதேபோல் கொவிட் பெருந்தொற்று தாக்கத்தினால் பொருளாதார ரீதியில் மேலும் நெருக்கடிக்குள்ளானோம்.

பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட மக்கள் அரசாங்கத்துக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மக்களின் உண்மை போராட்டத்தை ஒரு தரப்பினர் தங்களின் அரசியலுக்காக பயன்படுத்தி வெற்றி பெற்று தற்போது ஜனாதிபதியாகி அதிகாரத்தையும் கைப்பற்றியுள்ளார்கள்.

ஜனாதிபதித் தேர்தலில் கட்சியை பாதுகாக்க வேண்டும் என்பதை முன்னிலைப்படுத்தியே போட்டியிட்டோம். கட்சியின் சார்பில் களமிறங்காமல் பிற தரப்பினருக்கு ஆதரவு வழங்கியிருந்தால் சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு இன்று ஏற்பட்டுள்ள கதியே எமது கட்சிக்கும் ஏற்பட்டிருக்கும்.

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் கட்சியின் பெரும்பாலான சிரேஷ்ட உறுப்பினர்கள் பொதுத்தேர்தலில் போட்டியிடப்போவதில்லை என்று தீர்மானித்து இளம் தலைமுறையினருக்கும், புதியவர்களுக்கும் இடமளித்துள்ளார்கள் - என்றார். (அ)

# வாக்குச்சீட்டை படமெடுக்க தடை!

கொழும்பு, நவ. 13

வாக்களிப்பு நிலையத்தில் வாக்குசீட்டை படம் பிடித்தல், யாருக்கு வாக்களித்தேன் எனக் கூறல் உள்ளிட்ட விடயங்கள் தடை செய்யப்பட்டுள்ளன என்று தேர்தல் ஆணைக்குழுவின் ஆணையாளர் ஆர்.எம். ஏ. எல். ரத்நாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வாக்களிப்பு நிலையம் மற்றும் வாக்கெண்ணும் நிலையங்களில் கீழ்வரும் நடவடிக்கைகள் தடை செய்யப்பட்டுள்ளன.

கையடக்கத் தொலைபேசி பயன்படுத்த முடியாது.

படமெடுத்தல், வீடியோ செய்தல் உள்ளிட்ட நடவடிக்கைக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆயுதம் வைத்திருக்க முடியாது.

புகைப்பிடித்தல், போதைப்பொருள் பயன்பாடு மற்றும் மது அருந்ததல் போன்ற நடவடிக்கைக்கும் தடை. மது அருந்துவிட்டு வாக்களிக்க வரக்கூடாது.

தான் வாக்களிக்கும்போது அந்த வாக்குச்சீட்டை வாக்காளர் படமெடுக்கவோ, வீடியோ எடுக்கவோ முடியாது. அதனை காட்சிப்படுத்தவும் கூடாது. வாக்களிப்பு நிலையத்துக்குள் தான் யாருக்கு வாக்களித்தேன் எனக் கூறமுடியாது - என்றார். (அ)

# அநுர சொல்வதை விடுத்து செயலில் காட்டவேண்டும்!

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர் சங்கம் சுட்டிக்காட்டு



வவுனியா, நவ. 13

**வவுனியாவிலும் யாழ்ப்பாணத்திலும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க பல வாக்குறுதிகளை அளித்தார். அரசியல் கைதிகள் விடுவிக்கப்படுவர் எனவும் தமிழர்களின் நிலங்களை விடுவிபதாகவும் கூறினார்.அதனை தேர்தலுக்கு முன்னர் செய்யவேண்டும் என தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர் சங்கத்தினர் தெரிவித்தனர்.**

வவுனியாவில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர்கள் இவ்வாறு கூறினர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்-

காணாமல் ஆக்கப்பட்ட தமிழர் களின் தாய்மார்கள், ஜனாதிபதி அனுராவிடம் கேட்கும் உண்மை யான கோரிக்கை இது தான். உடனடியாக அனைத்து தமிழ் அரசியல் கைதிகளையும் விடுவிக்க வேண்டும். அதற்காக தேர்தல் வரும்வரை காத்திருக்க வேண்டாம்.

தமிழர் நிலங்களை மீட்டுத் தருவேன் என அனுர உண்மையாக நினைத்தால், முக்கியமான முதல் நடவடிக்கையாக மணல் ஆறு நிலத்தை தமிழர்களுக்கு திருப்பி வழங்கவேண்டும்.

இந்த நிலம், ஜே.ஆர். ஜயவர்தன ஆட்சியில் தமிழர்களின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளின் இடையிலான தொடர்பை துண்டிக்க திட்டமிட்டு பறிமுதல் செய்யப்பட்டது.

தமிழர்கள் முந்தைய சிங்கள அரசு காலங்களில் துன்பத்துக்கு உள்ளாகினர் என்பதை அனுர உணர்ந்து கொண்டால், ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தை ஏற்கவும், தமிழர்களை ஒடுக்குவதற்கான பயங்கரவாத சட்டத்தை நீக்கவும் வேணடும். - என்றனர். (அ)

# இலங்கையில் இவ்வருடம் இதுவரை 2,000 இணையவழி அச்சுறுத்தல்கள்!

கொழும்பு, நவ. 13

இணையவழி குற்றச் செயல்களில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக இலங்கை கணினி அவசர தயார் நிலைக் குழுவின் அதிகாரி சாருகா தமுனுபொல தெரிவித்தார்.

இந்த வருடத்தில் இதுவரை மொத்தம் 2,000 இணைய அச்சுறுத்தல் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சமீபத்திய மாதங்களில் இணையவழி குற்றச் செயல்கள் தொடர்பில் 9,500 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இவற்றில் 981 முறைப்பாடுகள் பாலியல் துஷ்பிரயோகம் சம்பந்தப்பட்டவை என்பதுடன், இணையவழி பாதுகாப்பு முறைமையே இதற்கு காரணம்.

இணையவழி அச்சுறுத்தல்கள் தவிர, இணைய மோசடிகள் சம்பந்தப்பட்ட கிட்டத்தட்ட 1,600 சம்பவங்கள் சமீப காலங்களில் பதிவாகியுள்ளன - என்றார். (அ)

# சமூக ஊடகத்தில் அறிமுகமானவரால் 14 வயது சிறுமி பாலியல் வன்புணர்வு

கொழும்பு, நவ. 13

ரிக் - ரொக் சமூக ஊடகம் மூலமாக அறிமுகமானவரை நம்பிய 14 வயது சிறுமி பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார். சந்தேகநபரை பொலிஸார் கைது செய்துள்ளர்.

அநுராதரத்தை சேர்ந்த சிறுமியே இவ்வாறு பாதிக்கப்பட்டார். இதேசமயம் இந்த சம்பவத்தில் இரத்தினபுரியை சேர்ந்த இளைஞரே கைதானார்.

சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது, குறித்த இளைஞரும் சிறுமியும் ரிக்-ரொக் மூலமாக நீண்டநாட்கள் காதல் உறவில் இருந்தனர் என்று கூறப்படுகின்றது.

இதனை சாதகமாக பயன்படுத்திய இளைஞர் சிறுமியின் நிர்வாண படங்களை அவரிடமிருந்து பெற்றுள்ளார். பின்னர், அவற்றை சமூகவலைத்தளத்தில் பதிவிடுவேன் என்று கூறி குருநாகல் பிரதேசத்துக்கு அழைத்துச் சென்று அவரை வன்புணர்வுக்கு உள்ளாக்கியுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் அநுராதபுரம் பொலிஸாருக்கு முறைப்பாடு அளிக்கப்பட்டது. இதையடுத்து, இரத்தினபுரியை சேர்ந்த இளைஞர் கைதுசெய்யப்பட்டார்.

# வாக்குகளை எண்ணும் பணி மாலை 4.15 மணிக்கு ஆரம்பம்!

கொழும்பு, நவ. 13

தபால்மூல வாக்குகளை எண்ணும் பணி நவம்பர் 14 ஆம் திகதி மாலை 4.15 மணிக்கு ஆரம்பமாகும் என்று தேர்தல் ஆணைக்குழுவின் ஆணையாளர் தெரிவித்தார்.

ஏனைய வாக்குகளை எண்ணும் நடவடிக்கை இரவு 7.15 மணியளவில் ஆரம்பமாகும் எனவும் அவர் கூறினார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

வாக்கு எண்ணும் நடவடிக்கைகள் மூன்று கட்டங்களாக இடம் பெறும் என்றும் அவர் கூறினார்.

அதேபோல், தேவையின்றி வெளியில் நடமாடுதல், கொண்டாட்டங்களில் ஈடுபடுதல் போன்ற அவசியமற்ற செயற்பாடுகளை தவிர்த்துக்கொள்ளுமாறும் வீடுகளிலேயே இருந்து தேர்தல் முடிவுகளை அவதானிக்குமாறும் அவர் அறிவித்தார்.

மேலும் வாக்கெடுப்பு நிலையங்களுக்கு கையடக்கத் தொலைபேசி, உள்ளிட்ட பொருட்களை எடுத்துச் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதற்கமையை வாக்கெடுப்பு நிலையத்தில் புகைப்படம் எடுத்தல், காணொளி பதிவு செய்தல் போன்ற செயற்பாடுகளுக்கு இடமளிக்கப்படமாட்டது என்றும் சட்டத்தை மீறுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ஆர். எம். ஏ. ரத்நாயக்க குறிப்பிட்டார். (அ)

# தங்கத்தின் விலை வீழ்ச்சி!

கொழும்பு, நவ. 13

கொழும்பு, செட்டியார் தெருவின் விலை நிலவரங்களுக்கு அமைவாக தங்கத்தின் விலை நேற்று முன்தினத்துடன் ஒப்பிடுகையில் நேற்று வீழ்ச்சி அடைந் துள்ளது.

அதன்படி, 24 கரட் தங்கம் ஒரு பவுண் 212,000 ரூபாவாகவும், 22 கரட் தங்கம் ஒரு பவுண் 195,500 ரூபாவாகவும் உள்ளதாக அகில இலங்கை நகைகள் விற்பனையாளர் சங்கப் பொருளாளர் ஆர்.பாலசுப்ரமணியம் தெரிவித்தார். நேற்று முன் தினம் 24 கரட் தங்கம் ஒரு பவுண் 213, 500 ரூபாவாகவும், 22 கரட் தங்கம் ஒரு பவுண் 197,000 ரூபாவாகவும் காணப்பட்டிருந்தது.

இதேவேளை, சர்வதேச சந்தையில் ஒரு அவுண்ஸ் தங்கத்தின் விலையானது 2,611.78 அமெரிக்க டொலர்களாக காணப்படுகின்றது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாண[illegible] பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 13.11.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.